



# அமரர். குமாரியர் தர்மலிங்கம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

11.03.2018 (ஞாயிற்றுக்கிழமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்னை மடியில்
1940
03
22

இறைவன் அடியில்
2018
02
09

# அமரர்
# குமாரியர் தர்மலிங்கம்

## திதிவெண்பா

மர்மமிலா ஏவிளம்பியில் மாதம் தையான தேதி இருபத்தேழில்
பர்வம் அபரமாகும் நவமியொடு கூடும் அனுசமதில் - கர்வம்
ஏதுமிலா கனவான் தர்மலிங்கத்தினுயிர்
கலந்தது கடவுள் பதம் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
மானிடனாய் பிறந்து வந்து
இறைபணிகள் செய்து கொண்டு
இறைவனையே பணிந்து என்றும்
மனிதம் காத்து நின்று
மகத்தான வாழ்வு தந்து
மங்காத புகளோடு
மானிலத்தில் வாழவைத்து
வாழ்ந்த காலம் போதுமென்று
வந்த வழி செல்வதற்கு
விரைவாக நாள் குறித்து
விண்ணகம் சென்ற எங்கள் தெய்வம்
**அமரர். குமாரியர் தர்மலிங்கம்**
அவர்களின்
நீங்காத நினைவுகளை மீட்டு
என்றுமே நிலைத்திருக்க
இம்மலரை
அன்னாரின் பாத கமலங்களில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

- இப்படிக்கு -
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

## தேவாரம்

மாதர் மடப்பிடியும் மடவன்னமு மன்னதோர்
நடையுடை மலை மகடுணையென மகிழ்வார்
பூதவினப் படை நின்றிசை பாடவு மாடுவந்
ரவர் படர் சடை நெடு முடியதொர் புனலர்
தேவ மோடேழிசை பாடுவ ராழ் கடல் வெண்டிரை
யிரைந்துரை கரை பொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயிறருமபுரம் பதியே

- திருஞானசம்பந்த சுவாமிகள் -

## திருவாசகம்

வான் ஆகி மண் ஆகி
வளி ஆகி ஒளி ஆகி
ஊன் ஆகி உயிர் ஆகி
உண்மையுமாய் இன்மையும் ஆய்க்
கோன் ஆகி யான் எனது என்று
அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவேனே

- மாணிக்கவாசகர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஜயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்றுவரை
கையாராத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே

- திருமாளிகைத் தேவர் -

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் மென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார் -

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றனர்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உண்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

- சேக்கிழார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருப்புகழ்

கலானிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத் தியஞான தேனமுதை தருவாயே
மாலயனுக் கரியனே மாதவரைப் பிரியானே
நாலு மறைப் பொருளானே நாககிரிப் பொருமாளே

-அருணகிரிநாதர் -

## வாழ்த்து

வான்முகில் வழாத பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி

உயர்வற வுயர்நல முடையவன் எவனவன்
மயர்வற மதிநல மருளினன் எவனவன்
அயர்வறு மமராக ளதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே.

அஞ்சிறைய மட நராய்!
அளித்தாய்! நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய்
ஆ!ஆ! வென்றெனக் கருதி
வெஞ்சிறைப் புள்ளுயர்த் தார்க்கென்
விடு தூதாய் சென்றக் கால்
வன்சிறையிலவன் வைக்கல்
வைப்புண்டால் என்செயுமோ

கமலக் கண் ணனென் கண்ணி னுள்ளான்
காண்பன வன் கண்களாலே
அமலங்க ளாகவிழிக்கும்
ஐம்புல னும்மவன் தன்னைக்
கண்ணுத லானொடும் தோற்றி
அமலத்தெய் வத்தோ டுலக
மாக்கயென் நெற்றியுளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகுந்தா! மணிவண்ணனே

என்பொல்லாத் திருக்குறளா! வென் னுள்மன்னி

வைகும் வைகல் தொறும்

அமுதாய வானேறே!

செய்குந் தாவரும் தீமை யுன்னடியார்க்கு

தீர்த்த சுரர்க்குத் தீமைகள்

செய்குந்தா! உன்னை நான்

பிடித்தேன் கொள் சிக்கனவே.

என்பிழைகோப் பதுபோலப் பனிவாடை யீர்க்கின்றது

என் பிமையே நினைந்தருவி யருளாத திருமாலார்க்கு

என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென் றொருவாய்ச்சொல்

என்பிழைக்கு மிளங்கிளியே? யான் வளர்த்த நீயலையே?

நீயிவையே சிறுபூவாய் நெடுமாலார்க் கென்தூதாய்

நோயெனது நுவலென் நுவலாதே யிருந்தொழிந்தாய்

சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனியுமனது

வாயலாகி லின்னடிசில் வைப்பாரை நாடியே.

உயர்வற வுயர்நலம் முடையவன் யவனவன்

மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்

அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்

துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனனக மலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன், பொறியுணர் வவையிலன்
இனனுணர், முழுநலம், எதிர்நிகழ் கழிவினும்
இனனிலன், னெனனுயிர், மிகுநரை யிலனே

இலனது வுடையனி தெனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலனலன், ஒழிவிலன், பரந்த அந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே

நாமவ னிவனுவன், அவளிவளுவளெவள்
தாமவரிவருவர், அதுவிது வுதுவெது
வீமவை யிவையுவை, யவைநலந் தீங்கவை
ஆமவை யாயவை, யாய்நின்ற அவரே.

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவர் ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே.

நின்றனர் ரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலர் ரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்
என்றுமொ ரியல்வினர் எனநினை வரியவர்
என்றுமொ ரியல்வொடு நின்றவெந் திடரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையண்ட சுரனே.

சுரரறி வருநிலை விண்முதல் முழுவதும்
வரன்முத லாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித் தமரர்க்கு மறிவியந்து
அரனயன் எனவுல கழித்தமைத் துளனே.

உளனெனி லுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவன் அருவமிவ் வருவுகள்
உளனென விலனென விவைகுண முடைமையில்
உளனிரு தகைமையொ டொழிவிலன் பரந்தே.

பரந்ததண் பரவையுள்நீர்தொறும் பரந்துளன்
பரந்தஅ ண் டமிதென நிலவிசும் பொழிவற
கரந்தசி லிடந்தொறும் இடந்திகழ் பொருடொறும்
கரந்தெங்கும் பரந்துள னிவையுண்ட கரனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி

நாம மாயிர மேத்த நின்ற
நாராயணா! நரனே உன்னை
மாமி தன்மக னாகப் பெற்றால்
எமக்கு வாதை தவிருமே
காமன் போதரு காலமென்று
பங்குனி நாள் கடை பாரித்தோம்
தீமை செய்யும் சிறிதரா! எங்கள்
சிற்றில் வந்து சிதையலே

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்திக் திருக்குமோ?
மருப்பொசிந்த மாதவன்தன் வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

மச்சணி மாட மதிளரங்கர வாமனனார்
பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற
பிச்சைக் குறையாகி யென்னுடைய பெய்வளைமேல்
இச்சை யுடையரே லித்தெருவே போதாரே

வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையில் பிறந்து,
கூடினேன் கூடியிளையவர்த்தம்மோடு
அவர்த்தரும் கலவியேகருதி,
ஓடினேன் ஓடியுய்வதோர்ப் பொருளால்
உணர்வெனும் பெரும் பதம் திரிந்து,
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

ஆவியே. அமுதே. எனநினைந்துருகி
அவரவர்ப்பணைமுலைதுணையா,
பாவியேனுணரா தெத்தனைபகலும்
பழுதுபோயொழிந்தனநாள்கள்,
தூவிசேரன்னம் துணையொடும்புணரும்
சூழ்புனற்குடந்தையேதொழுது. என்
நாவினாலுய்யநான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமேவேண்டித் தீவினைபெருக்கித்
தெரிவைமாருருவமேமருவி,
ஊமனார் கண்டகனவிலும்பழுதாய்
ஒழிந்தனகழிந்தவந்நாள்கள்,
காமனார் தாதைநம்முடையடிகள்
தம்மடைந்தார்மனத்திருப்பார்,
நாமம்நானுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும்நாமம்.

வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி,
நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன்
என்செய்கேன் நெடுவிசும்பணவும்,
பன்றியா யன்றுபாரகங்கீண்ட
பாழியா னாழியானருளே,
நன்று நானுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும்நாமம்

கள்வனேனானேன்படிறுசெய்திருப்பேன்
கண்டவாதிரிதந்தேனேலும்,
தெள்ளியேனானேன்செல்கதிக்கமைந்தேன்
சிக்கெனத்திருவருள்பெற்றேன்,
உள்ளெலாமுருகிக்குரல் தழுத்தொழிந்தேன்
உடம்பெலாம்கண்ணநீர்சோர,
நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன்
நாராயணாவென்னும்நாமம்.

எம்பிரான் எந்தை என்னுடைச்சுற்றம்
எனக்கரசு என்னுடைவாணாள்,
அம்பினால் அரக்கர்வெருக்கொளநெருக்கி
அவருயிர்செகுத்தவெம்மண்ணல்,
வம்புலாஞ்சோலைமாமதிள் தஞ்சை
மாமணிக்கோயிலேவணங்கி,
நம்பிகாள் உய்யநான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும்நாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்பிறப்பறியீர் இவரவரென்னீர்
இன்னதோர்த்தன்மையென்றுணரீர்,
கற்பகம்புலவர்களைகணெனன்றுலகில்
கண்டவாதொண்டரைப்பாடும்,
சொற்புருளாளீர்சொல்லுகேன்வம்மின்
சூழ்புனற்குடந்தையேதொழுமின்,
நற்பொருள்காண்மின் பாடி நீருய்ம்மின்
நாராயணாவென்னும்நாமம்.

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை,
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை
பெருநிலத்தாருயிர்க்கெல்லாம்,
செற்றமேவேண்டித்திரிதருவேன் தவிர்ந்தேன்
செல்கதிக்குய்யுமாறெண்ணி,
நற்றுணையாகப்பற்றினேன் அடியேன்
நாராயணாவென்னும்நாமம்.

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயராயினவெல்லம்,
நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடுபெருநிலமளிக்கும்,
வலந்தரும்மற்றுந்தந்திடும் பெற்ற
தாயினு மாயினசெய்யும்,
நலந்தருஞ்சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம்.

மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையார்வாள் கலிகன்றி,
செஞ்சொலாலெடுத்த தெய்வ நன்மாலை
இவைகொண்டு சிக்கெனத்தொண்டீர்..
துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்,
நஞ்சுதான் கண்டீர் நம்முடைவினைக்கு
நாராயணாவென்னும் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

## திருமாலை

காவலிற் புலனை வைத்துக்
கலிதனைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட் டுழிதரு கின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே,
மூவுல குண்டு மிழ்ந்த
முதல்வ.நின் நாமம் கற்ற.
ஆவலிப் புடைமை கண்டாய்
அரங்கமா நகரு ளானே.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா. அமர ரேறே.
ஆயர்தம் கொழுந்தே. என்னும்,
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

வேதநூல் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேலும்,
பாதியு முறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு,
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்,
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத் துடைய பேரால்,
கத்திர பந்து மன்றே
பராங்கதி கண்டு கொண்டான்,
இத்தனை யடிய ரானார்க்
கிரங்கும்நம் மரங்க னாய
பித்தனைப் பெற்று மந்தோ.
பிறவியுள் பிணாங்கு மாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்டிரால் சுகங்க ளுய்ப்பான்
பெரியதோ ரிடும்பை பூண்டு
உண்டிராக் கிடக்கும் போது
உடலுக்கே கரைந்து நைந்து,
தண்டுழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி யாடி,
தொண்டுபூண் டமுத முண்ணாத்
தொழும்பர்சோ றுகக்கு மாறே.

மறம்சுவர் மதிளெ டுத்து
மறுமைக்கே வெறுமை பூண்டு,
புறம்சுவ ரோட்டை மாடம்
புரளும்போ தறிய மாட்டீர்,
அறம்சுவ ராகி நின்ற
அரங்கனார்க் காட்செய் யாதே,
புறம்சுவர் கோலஞ் செய்து
புள்கவ்வக் கிடக்கின் றீரே.

புலையற மாகி நின்ற
புத்தொடு சமண மெல்லாம்,
கலையறக் கற்ற மாந்தர்
காண்பரோ கேட்ப ரோதாம்,
தலையறுப் புண்டும் சாவேன்
சத்தியங் காண்மின் ஐயா,
சிலையினா லிலங்கை செற்ற
தேவனே தேவ னாவான்.

வெறுப்பொடு சமணர் முண்டர்
விதியில்சாக் கியர்கள், நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோய தாகி
குறிப்பெனக் கடையு மாகில்
கூடுமேல் தலையை ஆங்கே,
அறுப்பதே கருமங் கண்டாய்
அரங்கமா நகரு ளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனடி சேர்ந்து அவன்திருவடியில் சரண் புகுந்த அமரர்.கு.தர்மலிங்கம் அவர்களின் மண்ணக வாழ்வில் தடம் பதித்த மகத்துவம்

கடல்வளம் ஒரு புறம் வயல் நிலம் மறுபுறம் தாமரைப் பூ மலர்ந்த நறுமணம் ஒரு புறம் நெங்கதிர் காற்றிலே உரசும் இனியதோர் ஓசையும் காலைக்கதிரவன் எழுமுன்பு கண்ணனவன் ஆலயத்தின் மணி ஓசையும், குயில் பாடும் கீதமும் பால் தயிர் மணமும் பத்தினித்தாய் கண்ணகியாள் கோயில் கொண்டு பண்பு நிறைந்த மக்கள் செறிந்து வாழும் நமது வந்தோரை வரவேற்கும் வந்தாறுமூலையிலே இனியதோர் வேளையிலே இன்புற்ற தம்பதிகளான குமாரியர் தங்கம் ஆகிய இருவருக்கும் 22.03.1940ம் ஆண்டு தாயின் கருவறையில் இருந்து கதிரவன் ஒளிபரப்ப கார்முகில் நகர்ந்து செல்ல தாரையிலே வந்துதித்தான் தாமரைப் பூ அழகாய் பத்துமாதம் சுமந்த அன்னை தன்குருதியினை சிந்தவைத்து குவலயத்தில் பெற்றெடுத்த தவப்புதல்வனுக்கு பெற்றோர்கள் இருவரும் தேர்ந்தெடுத்து தர்மலிங்கம் என்று பெயர் சூட்டி வளர்த்தார்கள். உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்த அன்னையின் மடியிலே தவழ்ந்து புரண்ட அன்பு மகனை அரவணைத்துப் பாலூட்டி பின்பு நிலாக்காட்டிச் சோறூட்டி நித்திரையும் செய்யவைத்து காலங்கள் சுழன்றோட கல்விதனைக் கற்கவைக்க கல்விக்கூடம் அனுப்பி கல்வி கற்று பண்புள்ள மாணவனாய் பாடசாலையில் திகழ்ந்து ஆசானுக்கு அடிபணிந்து சிறப்பாகக் கல்வி கற்று பெற்றோர்க்கு பெருமை தேடிய மகனாக வளர்ந்தான். புன்னகை பூத்த முகம் நல்லவற்றை எடுத்துரைக்கும் தன்மை பணிவான நன்நடத்தை பக்குவமான பேச்சு பொறுமை காக்கும் தன்மை இவரிடம் உள்ள நற்பண்புகள். பகிர்ந்துண்ணும் தன்மை இவரோடு கருவறையில் இருந்து வந்தவை என்றே சொல்ல வேண்டும் இவருடைய சிந்திக்கும் தன்மையும் விறுவிறுத்த சுறுசுறுப்பும் இவர் செய்த தொழிலின் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்தது என்றால் அதில் மிகை இல்லை. தொட்டதெல்லாம் துலங்கும் என்பதைப் போல் இவர் கைபட்ட தொழில் எல்லாம் இவருக்கு இலாபத்தை கொட்டியது. இவரோடு கூடப்பிறந்தவர்கள் மூவர் அண்ணன்மார் இருவரும் பாசமிகு தம்பி ஒருவரும். சிதம்பரப்பிள்ளை, சிவசம்பு இருவரும் அண்ணனாகவும் முத்துலிங்கம் என்பவர் பாசமிகு தம்பியாகவும் மொத்தமாக அன்பு கொண்ட நான்கு சகோதரர்கள் ஆவார்கள் இவர்கள் பெரியபரமக் குடியைச் சேர்ந்தவர்கள். இவர் ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய பொருளாளராகவும் சிறப்பாக பணி புரிந்து பலரது பாராட்டையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்க அம்சம். இவருடைய இளமைத்துடிப்பும் அழகுத்தோற்றம் கொண்ட காளைப்பருவமும் அந்தக்காலத்தில் பலரையும் கவர்ந்தன அதன் பிரதிபலிப்பாகவே இவரை சித்தாண்டி புதூர்க் குடியைச் சேர்ந்த கந்தக்குட்டி புதுநாயகம் தம்பதிகள் பெற்றெடுத்த அன்பு மகளான தவமணி என்ற அழகு இளமங்கையை மணமகளாக மணம் முடிக்க இவரை தேர்வு செய்து இருவீட்டாரும் மற்றும் உற்றார் உறவினர்களும் பெரியோர்களும் நிச்சயித்து இறைவனுடைய ஆசியோடு 1966ம் ஆண்டு ஆவணி மாதம் இவர்களது திருமணம் மிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக நடைபெற இவர் இல்லற வாழ்விலே குடிபுகுந்தார்.

தவமணி என்பவரை கரம்பிடித்த இவர் தொழில் புரிவதிலே முனைப்பாக இருந்தார். விவசாயத்தில் மிக ஈடுபாடும், காகித ஆலையில் பணியாற்றியும், கட்டட ஒப்பந்தக்காரராகவும், கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளராகவும், முருகன் மரக்காலை உரிமையாளராகவும் தொழில் முனையில் திகழ்ந்து உயர்நிலை அடைந்தார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இல்லறத்தில் இணைந்த இவருக்கு பல பிள்ளைகளும் பிறந்தன மணவாழ்விலே மகிழ்வாக வாழ்ந்த இவருக்கு மூத்த பிள்ளை பெண் குழந்தை பவானி என பெயர் சூட்டி ஆசையாக வளர்த்துவர பின்பு பாலமுரளி, என்ற அழகான ஆண்மகனும் மற்றும் சுமதி, சிவமலர், என்ற பெண் குழந்தைகளும் கடைசி மகனாக அனைவரும் ஆசைகொள்ளும் வண்ணம் பிரபாகரன் என்ற அழகு மகனும் பிறந்து மொத்தம் ஐந்து பிள்ளைகளுக்கு அப்பாவாகி பாசத்தோடு வளர்த்து பண்புடனே படிக்கவைத்து அரச தொழில் புரியும் பிள்ளைகளாகவும் பண்பு நிறைந்தவர்களாகவும் வளர்த்து இவர்களை இல்லற வாழ்விலே இணைக்கும் வண்ணம் சிறப்பு மிக்க அழகான அறிவான மணமக்களை தேர்ந்தெடுத்து ஹரிகரன் என்ற மூத்த மருமகனையும், இமாலி, நிரோஜினி என்ற மருமகளையும் மற்றும் மங்களேஸ்வரன், சிவகுமரன், விஜிதா என்ற மருமக்களையும் மனம் மகிழ்ந்து பண்பு நிறைந்த மருமக்களாக தேர்ந்தெடுத்து மணம் முடித்து தனது கடமைகளை சிறப்புறச் செய்து பலரும் பாராட்டும் வண்ணம் இல்லத்தரசனாக திகழ்ந்தார் என்றால் அதில் மிகை ஏதும் இல்லை. இவருடைய சிறப்பு இவர் கரம்பிடித்த மனைவியை என்றுமே இவர் கண்கலங்க வைத்ததில்லை எச்சந்தர்ப்பத்திலும் இவர்கள் கண்கலங்கி கஷ்ரப்பட்டவில்லை இருவரும் நகமும் சதையுமாக அன்போடும் பண்போடும் பாசத்தோடும் இணைபிரியாத தம்பதிகளாக வந்தாறுமூலையிலே மற்றத் தம்பதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள். உடல் சோர்வுற்று நோய் இவர்களைப் பற்றிக் கொண்ட போதும் இவர்கள் தானாகவே சுறுசுறுப்பாக இயங்கி அவர்களுடைய தேவைகளை அவர்களாகவே செய்து கொண்டு வாழ்ந்தது இவர்கள் செய்த பெரும் புண்ணியமும், இறைவனுடைய ஆசியும் என்றுதான் குறிப்பிட வேண்டும். இவர்களை ஒரு தெய்வமாக நினைத்து அன்பு காட்டி பராமரித்து வந்தனர்.

இதற்கு முக்கிய காரணம் இறைபதம் அடைந்த தர்மசீமானான தர்மலிங்கம் என்பவர் தனது பிள்ளைகள் மேல் அளவற்ற அன்பும் பாசமும் கொண்டு வாழ்ந்தார் இவர் தனது பிள்ளைகளை தண்டிக்கும் அளவிற்கும் கோபம் கொண்டு பேசும் அளவிற்கு அவர்கள் நடந்து கொள்ளவில்லை. பண்பான பிள்ளைகளாக இவர்கள் பெற்றோருக்கு பணிந்து நடந்து கொண்டதன் பிரதிபலிப்பே இவர் குடும்பத்தில் சிறந்த குடும்பத்தலைவனாக வாழ வழிசமைத்தது. இவர் உற்றார் உறவினர்களோடு மட்டுமின்றி சுற்றாடலில் உள்ளவர்களோடு சுமுகமான உறவைப் பேணியே பசுமையாக பண்பானவராக புத்திசாலியாக சிறந்த தொழில் ஆற்றல் கொண்டவராக செல்வச்சிறப்போடு அன்று தொட்டு இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்ரமில்லாதவராகவும் தான் உழைத்து சேமித்தவற்றிலே இவர் இறுதிவரை வாழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவரும் இவரது அன்பு மனைவியும் முதுமை அடைந்து இல்லறத்தில் இன்பமாக வாழ்ந்ததற்கு இன்னுமோர் முக்கிய காரணமும் உண்டு அது என்னவென்றால் இவர்களுடைய பேரப்பிள்ளைகள்தான். கிரிவோஷகன், சாய்லஹீஸ், டகாம்தி, கிர்த்தன்யா, அக்ஷயன். என்ற அழகான இவருடைய பேரப்பிள்ளைகளுடன் இவர் கடைசிகாலத்தில் மனமகிழ்வோடு அவர்களது குறும்புத்தனங்களைக் கண்டு கவலை இல்லாதவராக வாழ்ந்தார் என்பது ஒருபுறம் மறுபுறம் கொழும்பில் வாழும் இவருடைய இரண்டாவது மகனான பாலமுரளி தவிர்ந்த அனைத்து மக்களும் இவர் இந்த மண்ணை விட்டு மறையும் வரை இவரை சூழ்ந்து கொண்டே வாழ்ந்தார்கள் ஆகையால் இவர் மானிடப்பிறவி எடுத்து வந்தாலும் எக்குறையுமின்றி எதுவிதமான பெரும் நோயுமின்றி படுக்கையில் வீழ்ந்து கூடிய நாள் பரிதவிக்காமல் மரணிக்கும் தருவாயில் கூட மனைவிமக்களோடு உரையாடி தனது கண்களால் தன்மக்களை பார்த்தவண்ணமே இவர் இறையடி சேர்ந்தது இவர் செய்த தான தர்மம் நல்ல பண்பு கொண்டு இவர் இறைபணிகள் செய்து வாழந்ததுமே காரணம் என்று சொல்ல வேண்டும்.

வாழ்வும் சதமில்லை
வளங்களும் பெரிதில்லை
நோயில் வீழ்ந்து
நொடிப்பொழுதில் கண்மூடும்
வாழ்வே இது என வாழ்ந்து முடித்த

**அமரர். குமாரியர் தர்மலிங்கம் அவர்கள்**

இந்த மண்ணிலே 22.03.1940 அன்று மலர்ந்து 09.02.2018 வெள்ளிக்கிழமை அபர பட்ச





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் மழிந்து என் கடமை செய்யாமல் எனக்கு முன்பு சென்றதேனோ?

### பாசமிகு மனைவியின் துயர் பகிர்தல்

அங்கும் இங்கும் பிறந்தோம் - ஒன்றாய்
திருமணத்தில் இணைந்தோம்
அன்று தொட்டு இன்று வரை - உலகில்
அன்புடனே வாழ்ந்தோம்
கண்ணை இமை காப்பது போல் - என்னை
கண்கலங்க வைக்காமல்
இன்பமாக நாம் வாழ - என்றும்
இறைவன் துணை புரிந்தான்
இல்லற வாழ்வினிலே - அன்று
இனிதாக வாழ்ந்து கொண்டு
குலம் தழைக்க வேண்டுமென்று - நல்ல குழந்தைகளைப்
பெற்றெடுத்தோம்
ஓய்வென்று இருக்காமல் - நீங்கள்
ஓடி ஓடி உழைத்து
தேடி தேடிச் சேமித்து - மக்கள்
தேவைகளை பூர்த்தி செய்தாய்
குடும்பத்தின் குலவிளக்காய் - நமக்கு
குறைவின்றி ஐந்து பிள்ளைகள்
ஆலமரம் போன்று - நாங்கள்
அழகான குடும்பமாக
ஒரு குடையின் கீழே - நாம்
ஒருமித்து வாழ்ந்து வந்தோம்
என் வாழ்க்கை துணைவனனாய் - எனக்கு
எக்குறையும் வைக்கவில்லை
பொன்னாலும் பொருளாலும் - என்றும்
போடும் உடை தன்னாலும்.
கண்கலங்க வைக்காமல் - நீயோ
காலமெல்லாம் வாழவைத்தாய்

தேடித் தேடி உதவி செய்வாய் - பிறர்
தேவைகளைப் பூர்த்தி செய்வாய்
இறைபணிகள் தொடர்ந்தும் செய்வாய் - என்றும்
இறைவணக்கம் தினமும் செய்வாய்
உனக்காக வேண்டாமல் - தினமும்
உன் மக்களுக்காய் வழிபடுவாய்
மைத்துணிமார் துயர் அறிந்து - நீயோ
மனமகிழ்ந்து உதவி செய்வாய்
நோயாக நான் துடித்தால் - எனக்கு
நோகாமல் பணி புரிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாக நீ இருந்தும் - என்னை
நோக விடமாட்டாய்
பண்பான பிள்ளைகளை - வீட்டில்
பணிவோடு வளர்த்தெடுத்து
கடமை உனர்வோடு - அன்று
கல்வி கற்க வழியமைத்தாய்
ஆசையாய் பெற்றெடுத்த - நம்
ஐந்து பேரின் திருமணத்தை
அழகான முறையினிலே - வீட்டில்
அற்புதமாய் நடத்தி வைத்தாய்
ஒவ்வொரு மக்களுக்கும் - நீங்கள்
ஒரு குறையும் வைக்காமல்
ஐவரும் நன்றாய் வாழ - நீயே
அனைத்தையும் செய்துவிட்டாய்
கண்ணியமாய் கரம்பிடித்தாய் - நாமோ
கடைசிவரை பிரிந்ததில்லை
சண்டை என்று நமக்குள்ளே - என்றும்
சலசலப்பு வந்ததில்லை.
கடைசிவரை இருவருமே - வீட்டில்
கவலை இன்றி ஒன்றாய் வாழ்ந்தோம்
பொய் சொல்லி வாழாமல் - என்றும்
பொறுமை காத்து நீ நடப்பாய்

எந்த ஒரு விடயத்தையும் - நீங்கள்
என்னிடத்தில் மறைத்ததில்லை
பெற்றெடுத்து தாயை கூட - வீட்டில்
பெருமையுடன் பராமரித்து
பெரும் பணிகள் செய்து - நீங்கள்
பெற்ற கடன் தீர்த்தீர்கள்
கூடப்பிறந்த உறவுகளோடும் - என்றும்
குடும்பத்தகராறின்றி
குணம் நிறைந்த சோதரனாய் - அன்பாய்
குவலயத்தில் வாழ்ந்தீர்கள்.
பெற்றெடுத்த பிள்ளைகளே - என்றும்
எமக்குத் துணை என்று சொல்லி
பெருமிதம் கொண்டு - வீட்டில்
பெருமையுடன் வாழ்ந்தீர்கள்
நான் மடிந்த பின்பு - என்
கடமைகளை செய்வீரென்று
கடைசிவரை நம்பினேன் ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவிழந்து பொட்டிழந்து - எனது
புன்னகைமுகமிழந்து
நோய் துரத்தி வருகுதப்பா - நானோ
நொந்து மனம் வாழுகின்றேன்.
உன்னுடனே நான் வருவேன் - உலகில்
அந்த நாளை எண்ணுகின்றேன்
விண்ணுலகில் கூட - நாங்கள்
ஒன்றாகவே வாழ்ந்திடுவோம்
உன்னினைவு என்னை - தினம்
வாட்டி வாட்டி வதைக்கின்றது
உன்னை மறந்தால்தானே - இங்கே
உன் நினைவும் மறந்து செல்லும்
உன் நினைவும் மாறாது - அதற்கு
உள்ளம் இடம் கொடுக்காது
எண்ணி எண்ணி ஏங்கி - மனம்
ஏ்தோ ஒன்று செய்கிறது
ஆண்டவனோ அழைத்து விட்டான்
அவன் திருவடியில் சரண் புகுந்தாய்
சுடர் விளக்காய் நீயிருந்து
ஒளி பரப்பி வாழ்க வாழ்க.
உன் ஆன்மா சாந்தி பெற
இறைவனை வேண்டி வழிபடும்

உங்கள் இணைபிரியா
அன்பு மனைவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகள் பவானியின் புலம்பல்கள்

எவருக்கும் கிடைக்காத அப்பா உலகிலே எனக்கு கிடைத்த அப்பா.
தோளில் என்னைச் சுமந்து வானிலே நிலாக்காட்டி
உண்ணும் உணவு தனை ஊட்டி வளர்த்த அப்பா.
மார்பிலே எனைப்போட்டு மகிழ்வோடு அணைத்துக் கொண்டு
சாமி கதை சொல்லி தூங்கவைப்பார் என் அப்பா.
பாடசாலை செல்ல முன்பே பூமியிலே அமரவைத்து
"அ" எழுதச் சொல்லும் ஆசையுள்ள என் அப்பா.
கல்வி கற்க என்னை அன்று கல்விக்கூடம் அனுப்பிவிட்டு
காத்து நின்று கூட்டிக் கொண்டு வீடு வரும் எனது அப்பா.
உறவு முறை சொல்லி உற்றார் உறவுகளை
பாசத்தோடு பழக வைக்கும் பண்பு கொண்ட எனது அப்பா.
கேட்டதெல்லாம் வாங்கி தந்து கேட்காததும் தந்து
தேவையெல்லாம் பூர்த்தி செய்யும் புண்ணியவான் எனது அப்பா
பல்கலைக்கழகம் வரை படிக்கவைக்க எனை அனுப்பி
பட்டம் பெற துணை புரிந்த பாசமுள்ள எனது அப்பா
கூடப்பிறந்தாரோடு கூடி மகிழவைத்து
குடும்பத் தலைவனாக திகழ்ந்தவர் எங்களப்பா
பதவி ஒன்றை தேடித்தந்தார் பவித்திரமாய் எனை வளர்த்தார்
பண்பு தவறாமல் நடக்கவும் வழியமைத்தார்.
மனதுக்கேற்ற மணாளனை மருமகனாய் தேர்ந்தெடுத்து
காலமெல்லாம் நான் வாழ கரம்பிடித்து தந்த அப்பா.
ஒரு கூட்டின் பறவைபோல ஒற்றுமையாய் நாம் வாழ்ந்தோம்.
பாசமுள்ள அப்பாவாக காலமெல்லாம் நீ இருந்தாய்
நோய் நொடியாய் நீ படுக்க நொந்து மனம் நான் அழுதேன்
கடல் கடந்து வாழுகின்ற மருமகனும் கூட
கண்கலங்கிப் போய் நின்றார் உங்களது மறைவாலே.
மறக்க முடியாத மகானைப்போல் வாழ்ந்தீர்கள்
பிரிக்க முடியாத பிதாவாக இருந்தீர்கள்
வாழ்ந்த காலம் போதும் என்று வந்த வழி செல்ல முன்பு
கூடி ஒன்றாய் நாமிருக்க உலகை விட்டுச் சென்றீர்கள்

உங்கள் ஆத்மா இறைவனடி சேர தினம் தோறும் பிரார்த்திக்கும்
உங்கள் மகள்
பவானி ( ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாகக் கூடாதா இச்செய்தி புலம்பி அழுதேன்.
### பாசமிகு மகன் பாலமுரளி புலம்பல்

அப்பா போகும் போது சொல்லவில்லை
பொழுது விடிகையிலே எனை
நாடி வந்த செய்தி நான் கேட்டு
மறுகணமே உறைந்து விட்டேன்.

என் உடல் செயலிழந்து போக
உள்ளத் துடிப்பு சற்று நேரம் நிற்க
நாடி நரம்பெல்லாம் ஆடி அடங்க
அவ்விடத்தில் அமர்ந்தேன்.

பொய்யாகக் கூடாதா இச்செய்தி
என புலம்பி அழுதேன்
மீண்டும் வந்த தொலைபேசி அழைப்பு
உங்கள் மரணத்தை உறுதி செய்தது.

உங்களது உடலைப் பார்க்க
உடன் வரமுடியாமல்
எனது உள்ளம் துடிதுடித்து அழுதது
கண்கள் கண்ணீர் சொரிந்தன.

பாசமாய் வளர்த்த அப்பா
என்னை இறுதி நேரம் பாராமல்
வேகமாய் விண்ணை நோக்கி
விரைந்து சென்றதேனோ புரியவில்லை.

எனது விடியலுக்கு
விடி வெள்ளியாய் இருந்தார்
மெழுகு வர்த்தியாய் எரிந்து
என் வாழ்விற்கு ஒளி கொடுத்தார்.

விண்ணுலகம் விரைந்த அப்பாவை
மண்ணுலகில் தவிக்கும் நான்
மறுபடியும் பார்க்கமுடியாமல்
துடிப்பதனை யார் அறிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சொல்ல நினைத்தாரோ
என்னைப் பாக்கத் துடித்தாரோ
இறுதிப் பயண நேரத்திலே
எட்டாத் தூரம் நான் இருந்தேன்.

வாழ்வதற்கு வழி அமைத்தாய்
வாழ்க்கை ஒன்றை தேர்ந்தெடுத்தேன்
ஓடி வந்து அரவணைத்து
ஆசி கூறி வாழ்த்துச் சொன்னாய்.

உலகை விட்டு மறைந்தாலும்
உங்கள் உருவம் சிதைந்தாலும்
எனது உள்ளங் கோயிலிலே உன்னை வைத்துப் பூஜிப்பேன்.

உங்கள் ஆன்மா சாந்தி பெற
இறைவனை நாம் தினம் வேண்டி
எனது குடும்பம் வணங்குமப்பா
தினமும் வணங்கி வழிபடுவோம்.

உங்கள் அன்பு மகன்
பாலமுரளி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சுமதியின் மனக்குமுறலின் துளிகள் சில

கருவிலே சுமந்தவள் அன்னை
காவலனாய் காத்தவர் தந்தை
உயிர் வாழ் உரமிட்டார் அப்பா
உத்தமியாய் வளத்தெடுத்தாள் அம்மா.

உருவாக வெளிவந்த என்னை
உயிரான அன்பினை செலுத்தி
உணர்வோடு தமிழையும் ஊட்டி
பயிராக வளர்த்திட்டாய் அப்பா
அமுதான மொழிகளால் பேசி
அறத்தினை வாழ்வில் காட்டி
இல்லறம் புகும் வழி தேடி
இனிதான வாழ்வினை தந்தாய்
கோபமாய் பேசிட மாட்டாய்
கொடுத்ததை சொல்லவும் மாட்டாய்
காணாமல் இருக்கவும் மாட்டாய்
கண்டால் பேசாமல் போகவும் மாட்டாய்
நோயாலே படுக்கையில் வீழ்ந்தாய்
ஆகாரம் இல்லாமல் இருந்தாய்
தள்ளாடும் உடல் நிலை அடைந்தாய்
தன்னீரைப் பருகியே மடிந்தாய்
எல்லோர்க்கும் நல்லதை செய்வாய்
எதுவாக இருந்தாலும் பகிர்வாய்
அன்பாகப் பேசியே மகிழ்வாய்
அறிவுள்ள கதைகளை சொல்வாய்
இறைவனின் திருவடி அடைந்தாய்
சுடராகி ஒளிதனைக் கொடுப்பாய்
உன் ஆத்மா சாந்திக்கு வேண்டி
தினம் தினம் வணங்குவேன் அப்பா

பாசமிகு அன்பு மகள்
சுமதி ( ஆசிரியை )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவின் உறவுக்கு ஈடாக முடியுமா ?
## மகள் சிவமலரின் எண்ணத்தில் எழுந்த வரிகள்

அன்பின் பொக்கிஷமாய் பாசத்தின் சொரூபமாய்
என்னை வளர்த்தெடுத்த என் தந்தையே
எங்களை தவிக்கத் துடிக்க வைத்து விட்டு
விரைவாய் விரைந்து சென்றதேனோ?
ஆயிரம் உறவுகள் அரவணைக்க இருந்தாலும்
அப்பாவின் உறவுக்கு ஈடாக முடியுமா
இணையில்லா தெய்வமே என் தந்தையே - உன்னை
நினைக்கையிலே வெம்பி மனம் துடிக்கிறதே
பிள்ளைகள்தான் உலகம் என்று வாழ்ந்தாயே
அன்பு கொண்டு எங்களை நீ வளர்த்தாயே
ஆளாக்கிய உங்களை நாம் மறப்போமா
பூவிழந்து பொட்டிழந்து பெற்றதாயார்
புன்னகையும் இல்லாமல் வாடுகின்றாள்
நீ வாழ்ந்த இல்லறத்தில் நீயில்லாமல் - உன்
நினைவுளோ அலை அலையாய் எழுகின்றதே
கண்ணிமைக்கும் பொழுதினிலே நீ மறைந்தாய்
விண்ணுலகம் தனிமையிலே சென்று விட்டாய்
பேத்தி இங்கே அம்மப்பாவவைத் தேடித் தேடி
பெருமூச்சி விடுவதங்கே கேக்குதாப்பா?
மயிலாட மறக்கலாம் மானிலத்தில்
குயில் கூவ மறக்கலாம் வானகத்தில்
மான் துள்ள மறக்கலாம் கானகத்தில்
கடல் அலையை மறக்கலாம் சமுத்திரத்தில்
பெற்றெடுத்த உன்மகளோ வையகத்தில்
பெருமிடிதான் விழுந்தாலும் மறவேன் உன்னை

இங்கே உன் பிரிவால் வாடும்
அன்பு மகள்
சிவமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி வரை நான் இருந்தேன் உன்னருகிலே
## உன் இறுதி மூச்சும் போனதப்பா என்மடியிலே
### கடைசி மகன் பிரபாகரனின் உள்ளக் குமுறலில் சில துளிகள் .....

கரம் கோர்த்து எனை அழைத்து
கடை கடையாய் கூட்டிச் சென்று
விரும்பியதை வாங்கித் தந்து
வீடு நோக்கி அழைத்து வந்து
என்னை நீயோ அணைத்துக் கொண்டு
எனக்கு முத்தம் தருகையிலே
எனக்கு முன்பு பிறந்தோரெல்லாம்
ஏதோ சொல்லி பொறாமை கொள்வர்
ஆலயங்கள் கூட்டிச் சென்று
ஆண்டவனை வேண்டச் சொல்லி
கடவுள் பாதம் பணிவாய் என்று
கண்ணை மூடி வேண்டி நிற்பார்.
ஐந்து பேர்க்கு அப்பாவானவர்
அன்பாய் கூடி வாழ்க என்பார்
ஒரு குலையின் தேங்காய் போல
ஒற்றுமையை வாழ்க என்றார்
ஆசையாக பேசிக் கொள்வார்
அறிவுதனை எடுத்துரைப்பார்
பாசத்தோடு அரவணைத்து
பண்பாய் வாழ வேண்டும் என்பார்
முதுமை உன்னை தேடி வர
முகத்தில் சோகம் ததும்பி நிற்க
நோயும் உடம்பை சூழ்ந்து கொள்ள
நொந்து விழுந்தாய் படுக்கையிலே
இறுதிப் படுக்கை இதுவோ என
இரவு பகலாய் கவலை கொண்டேன்
உண்ணும் உணவை தவிர்த்துக் கொண்டாய்
உறங்கும் நேரம் குறைத்துக் கொண்டாய்
எதனால் இவைகள் என நினைத்து
ஏங்கி ஏங்கி நான் துடித்தேன்
உன்னைப் போல அப்பாவை
உலகில் நாங்கள் காண்பதெப்போ
வாழ்ந்த காலம் போதுமென்று
வந்த வழியில் சென்றாயோ
இறுதி மூச்சு போகையிலும்
இருந்தேன் உங்கள் அருகினிலே
உனது மூச்சு போனது கூட
உன் கடைசி மகனின் மடியில்தான்
ஆண்டவன் அழைக்க நீ சென்றாய்
அவனிடம் நானும் வேண்டுகின்றேன்
அப்பா ஆத்மா சாந்தி பெற
அருள்வாய் இறைவா துணைபுரிவாய்

பாசமிகு கடைசி மகன்
பிரபாகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள மாமாவே
## பண்பின் பாசத்தின் உறைவிடம் நீங்கள்

"வையகத்துள் வாழ்வாங்க வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய வாழ்ந்த எங்கள் அன்பு மிக்க மாமாவே உங்கள் ஆத்மா தெய்வத்திருவடியை சேர்ந்தாலும் உங்களுடைய சிரித்த முகமும் கனிவான பேச்சும் எங்களுள் நீங்காத நினைவாக தெரிகிறது. நிற்கின்றது. பிறருடைய மகிழ்ச்சியிலே ஆனந்தம் காணும் போதுதான் ஒருவர் உண்மையாக வாழ்ந்தவராக உணர்வார். மனிதனுடைய வாழ்க்கையில் பிறப்பும் இறப்பும் என்பது இயற்கை ஆனால் ஒருவர் தன்வாழ் நாளில் எதை சாதித்தார் என்பதில்தான் அவருடைய வாழ்கை முழுமை அடைகிறது.

அந்த வகையில் பிறந்து வளர்ந்து பாசமிகு எங்களுடைய அத்தையை கரம் பிடித்து கண்கலங்காமல் வாழ்ந்தீர்கள் என்பதனை எங்களை நீங்கள் மருக்களாக்கிய குறுகிய காலப்பகுதியிலே அறிந்து கொண்டோம். அதை விடவும் நீங்கள் பண்போடு பெத்து வளர்த்த உங்களுடைய பாசமிகு பிள்ளைகளின் பண்பான நடத்தை அன்பான அரவணைப்பு அடக்கமான பேச்சு கொடுத்துதவும் தன்மை எங்களுடைய பெற்றோர்களை இவர்கள் கவனிக்கும் விதம் இவைகளை வைத்தே உங்களுடைய நேர்மை உங்களுடைய திறமை உங்களுடைய கடின உழைப்பு ஒரு இல்லத்தின் அரசனாக நீங்கள் வாழ்ந்த விதம் என்பவற்றை எழிதாக அறியமுடிந்தன.

நீங்கள் எவருக்குமே கிடைக்காத மாமா அதுமட்டுமின்று நீங்கள் மாமாவாக இல்லாமல் எங்களுடைய அப்பாவாகவே நடந்து கொண்டீர்கள் என்பதை நினைக்க நினைக்க எங்களுக்கு பெருமையாக உள்ளது. அரிது அரது மானிடராய் பிறத்தல் அரிது என்பது ஔவை மூதாட்டியின் அருள்வாக்கு அவ்வாறு அரிய பிறவி எடுத்த நாம் எம் இறுதி மூச்சி வரை அல்லன கடிந்து நல்லன செய்தலே மாண்புறும் மக்கள் பண்பாடு அந்தவகையில் வாழ்ந்தவர்தான் அமரத்துவம் அடைந்த எங்களுடைய பாசமிக மாமனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப் போல் ஒரு மாமா எவருக்கும் கிடையாது இவர் வாழ்ந்த காலத்தில் இவருடைய கண் பார்வையின் கீழ் நாங்களும் சில காலங்கள் வாழ்ந்து விட்டோம் என்பதனை நினைக்கநினைக்க எங்கள் மனம் மகிழ்வடைகின்றது என்றால் அதில் மிகை ஏ தும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

ஆகவே இன்னும் இவர் வாழ்ந்திருக்கலாம் இறைவன் அதற்கு இடம் அளிக்கவில்லை இவரின் வாழ்நாள் காலம் இவ்வளவுதான் இதுவேஇறைவனின் நியதி இதனால் இப்பிறவி எடுத்த நாமும் இவர் வாழ்க்கையை பின்பற்றி இதமாக வாழவேண்டும் என்று இறைவனை வேண்டி இவருடைய ஆத்மா சாந்திபெற இதமாக இதமாக இறைவனை பணிந்து நிற்கும்.

பாசமிகு மருமக்கள்
- ஹரிஹரன்
- இமாவி நிரோஜினி
- மங்களேஸ்வரன்
- சிவகுமரன்
- விஜிதா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் எதிர்பார்ப்பு தேடலிலே

நித்தம் எமை சுமந்து
நித்திரை செய்ய வைக்க
தோள்மீது போட்டு
தாலாட்டுப் பாடி
அன்பு காட்டும் அம்மப்பாவே
எங்கே இன்று உன்னைக்
காணவில்லை.

கையிலே மிட்டாயோடு
காத்திருந்து எம் வரவை
கண்ணெதிரே வந்தவுடன்
கையை பிடித்திழுத்து
வாயிலே மிட்டாய் போடும்
அம்மப்பாவே
மீண்டும் நீ வாராயோ?

நிலாவை பிடித்து வர
விண்ணுலகம் சென்று விட்டார்
நீண்டகாலம் செல்லும்
மீண்டும் திரும்பி வர
நித்திரை கொள் என்மகனே
என்று அம்மா கூறுகிறாள்
எப்போது வருவாய் நீ எதிர்பார்க்கின்றோமே

நீ பதித்த கால்தடத்தை
பார்த்து பார்த்து நிற்கின்றோம்
நீ இருந்த நாற்காலியை
தொட்டு தொட்டுப் பார்க்கின்றோம்
உண்ண உணவை தொட்டால்
உன்முகம்தான் தெரிகிறது
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்
வாராயோ ஓடி இங்கே

உன்னை எதிர்பார்த்து ஏங்கும் பேரப்பிள்ளைகள்
- கிரிவோஷகன்
- சாய்லஹீஸ்
- டகாம்தி
- அக்ஷயன்
- கிர்த்தன்யா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைந்தோடி வாராயோ இங்கே
## மைத்துணிமார் , மச்சான்மாரின் உள்ளக் குமறல்

அத்தான் அத்தான் என்று ஆசையாய் ஓடிவந்தால் முத்தான அத்தான் முற்றத்தில் வந்து நின்று வாடிய முகம் பார்த்து வயிறையும் உடன் பார்த்து வயிறார உணவு தந்து அத்தான் பசியாற வைப்பார். எங்களின் நிலமைதனை எளிதாகப் புரிந்து கொண்டு குறை தீர குறையாமல் பணம் தந்து செல்வார். சிறப்பான காலத்தில் அழகான புது உடைகள் அன்போடு அவர் வாங்கித் தருவாரே என்றும் இனிமேலும் இவரைப்போல் அறிவான அத்தானை உலகிலே நாம் காண்பதெப்போ

உறவுகள் வரும் போகும் இவரைப் போல் இனி யார்தான் எமக்கென்று தோன்றுவார் இங்கே குறை தீர்த்து பசிதீர்த்து குறைகளை தீர்த்திட விரைந்தோடி வருவாயோ இங்கே.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கும்
மச்சான்மார், மைத்துணிமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட மனிதரில் மாணிக்கம்

வாழ்ந்தால் இவரைப்போல் வாழவேண்டும்
வையகம் போற்றி என்றும் பேசவேண்டும்
நீங்காத நினைவில் இடம் பிடிக்க வேண்டும்
நீங்கள் நடந்து கொள்ளும் விதத்தில் அது அமைய வேண்டும்

இன்றோ என்றோ இறப்பே திண்ணம்
சொர்க்கம் நரகம் வாழ்தலின் வண்ணம்
நன்றே வாழ்ந்தால் பிறர் மனம் எண்ணும்
சென்றே தீர்வாய் இறையடி சரணம்.
தர்மம் செய்தால் தலை அதைக்காக்கும்
தானம் செய்தால் உயிரையே காக்கும்
பாவம் செய்தால் பாதாளம் செல்வாய்
மோசம் செய்தால் நாசமாய் போவாய்.

மண்ணுலகில் பிறந்தவர்கள் வாழ்ந்து மடிந்து
விண்ணுலகம் செல்வதொன்றே உண்மை
ஆகவே இவ்வுலகில் பிறந்த நாங்கள் என்றும்
நல்லதையே செய்து நல்லவராய் வாழந்து கொண்டால் நன்மை

அந்தவகையில் பிறந்து அன்போடும் பண்போடும் வாழ்ந்து இறைபணிகள் பல செய்து ஆலய பொருளாளராகி சிறந்த ஒரு விவசாயியாகி சிறப்பு மிக்க தொழிலாளியாகி கடை உரிமை முதலாளியாகி மர ஆலை பொறுப்பாளராகி அன்பு மனைவியின் கணவனாகி ஐந்து பிள்ளைகட்கு அப்பாவாகி பண்பான மருமக்களுக்கு மாமனாராகி அழகான பேரப்பிள்ளைகட்கு அப்பப்பாவாகி அன்புடைய அம்மப்பாவாகி மைத்துணிமாருக்கு அத்தானாகி மச்சான்மாருக்கு மச்சானாகி உற்றார் உறவினருக்கு சொந்தக்காரனாகி அயல் வீட்டாருக்கெல்லாம் நல்ல மனிதனாகி ஊருக்கோர் நலன் விரும்பியாகி வளம்பெற வாழ்ந்து வந்த வழி சென்று இறைபதம் அடைந்துள்ளார் இவர் ஆத்மா சாந்தி பெற வேண்டும்.

மு. துரைராஜா
வந்தாறுமூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் உம் நினைவுடன்...

தந்தையிலும் ஓர் தாய்மையை உணர்ந்தோம்
வந்து எம்மை நீர் வாரி அணைத்த போது
விந்தை மனிதராய் உனை எண்ணி வியந்து நின்றோம்
உந்துகை தந்து எம்மை நீர் உயர்த்திய போது
சிந்தையெல்லாம் உம் நினைவுகள் சுமந்தோம்
சிந்தையிலும் நீர் நிமிர்ந்து நின்ற போது
நிரந்தரமாய் எம்மை விட்டு நீர் நீங்கிய போது - ஐயா!
நிலை கலங்கி நிர்க்கதியாய் நிற்கின்றோம்.

பிள்ளைகள் நாம் செய்த பிழைகளையெல்லாம்
பக்குவமாய் எடுத்துக்கூறி பண்படுத்தினீர்கள்
செல்லமாய் நாம் சிணுங்கி அடம் பிடித்த போது
உம் புன் சிரிப்பால் எம்மை சிறைப்படுத்தினீர்கள்
மெல்லமாய் வந்து நீங்கள் கட்டித் தழுவும் அழகினில்
வெல்லமாய் நாங்கள உருகிப்போனோம்
கள்ளமாய் வந்து காலன் உம்மை கடத்தி சென்றபோது
உள்ளம் தாங்கா கவலையில் காணாமல் போனோம்.

நெஞ்சம் மறக்கா உம் நினைவுகளை
நினைத்துக்கொண்டே நாம் வாழ்வோம் - ஐயா!
தஞ்சம் புகுந்த உம் மடிதனை தினம்
தினம் எண்ணிக்கொண்டே தலை சாய்வோம்
பஞ்சம் இல்லா உம் அன்பை என்றும்
பத்திரமாய் மனதில் நாம் சுமப்போம் - ஐயா!
எஞ்சும் இந்த நாட்களில் எம் உயிராய்
எமக்குள்ளே உம்மை தாங்குவோம்.

அபி
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் நினைவலைகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றி! என் வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூம் கழற்கு இணை துணைமலர் கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கண்டு நின் திருவடிதொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடி உடையாய் எமை உடையாய்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனக்
கடிமலர் மலர மற்று அண்ணல் அம்கண் ஆம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே!
அலை கடலே! பள்ளி எழுந்தருளாயே.!

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு, நமக்கு
தேவ! நல் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவு அரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரை
சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!

பப்பற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா!
செப்புறு கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருஉரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கை உள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப் பணி கொளும் ஆறு? அது கேட்போம்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்?
பந்தணை விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில்தொறும் எழுந்தருளியபரனே!
செந்தழல் புரை திருமேனியும் காட்டி
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே.!

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொருளே! உன தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே!
வண் திருப்பெருந்துறையாய்! வழி அடியோம்
கண் அகத்தே நின்று களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்பு அடியார்
எண் அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கி
திருப்பெருந்துறை உறைவாய்! திருமாலாம்
அவன் விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும். நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே.!

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் அருளிச் செய்த திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்கேட்டேயும் வாள்தடங்கள்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கு அன்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது) இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விருப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலாறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுதுஎன்று எல்லாமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்புச் சிலம்பும் குருகுஎங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்குஎங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போத்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்தோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலார் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்று அல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர்உளன்
கோதில் குலத்தான் றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவரைப் பாடும் பரிசேலார் எம்பாவாய்.

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல்போற்
செய்யா வெண்ணீறாடி செல்வ சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளர்
ஐயாநீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந் தோங்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன் நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ்வானும் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துஉடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பப்
கொங்கைகள் பொங்கப் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதித்திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வதைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையான் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையான்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி யவன்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குஉண் சுருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கள் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பாங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கென்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சி

தமேவமத்வா பரவாஸ/தேவம்
ரங்கேசயம் ராஜவதர்கணீயம்-
ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரி ரேணும் பகவந்த மீடே.

மண்டங் குடியென்பர் மாமறையோர். மன்னியசீர்த்
தொண்ட, ரடிப்பொடி தொன்னகரம். - வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப், பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்,
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி,
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்,
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ,
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்தத மிருஞ்சிற குதறி,
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி றுறவதன் விடத்தனுக் கனுங்கி,
அழுங்கிய ஆனையி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி,
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிறு ளகன்றது பைம்பொழில் கமுகின்,
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ,
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்.
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இருந்தின சுரும்பினம் இலங்கையர் குலத்தை.
வாட்டிய வரிசிலை வானவ ரேறே.
மாமுனி வேள்வியைக் காத்து,அவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் மரசே.
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி.
கலந்தது குணதிசை கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த.
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்.பள்ளி யெழுந்தரு ளாயே.

இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ?
இறையவர் பதினொரு விடையரு மிவரோ?
மருவிய மயிலின னறுமுக னிவனோ?
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி,
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்.
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ?
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.

அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ?
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ?
இந்திர னானையும் தானும்வந் திவனோ?
எம்பெரு மானுன் கோயிலின் வாசல்,
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
அந்தரம் பாரிட மில்லைமற் றிதுவோ?
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா,
எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்,
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ?
தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி,
அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.

ஏதமில் தண்ணுமை யெக்கம்மத் தளியே
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி,
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலு ளெல்லாம்,
மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
ஆதலி லவர்க்குநா ளோலக்க மருள
அரங்கத்தம் மா.பள்ளி யெழுந்தரு ளாயே.

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா,
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடியென்னும்
அடியனை, அளியனென் றருளியுன் னடியார்க்-
ஆட்படுத்தாய் பள்ளி எழுந்தரு ளாயே.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை

அன்ன வயல் புதுவை ஆண்டாள், அரங்கற்குப்
பன்னு திருப் பாவைப் பல் பதியம்! - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை, பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு!
சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே, தொல்பாவை
பாடி அருள வல்ல பல் வளையாய் - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம் மாற்றம்
நாங் கடவா வண்ணமே நல்கு!

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்!
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெறும்செந் நெல்ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிமழைக் கண்ணா ஒன்று நீகை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல்மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பனாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்.

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்.

கீசுகீசு என்று எங்கும் ஆனைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து
வாசநறும் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீகேட்டே கிடத்தியோ?
தேச முடையாய்! திறவேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
வான் போகின்றாரைப் போகாமல்காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலம் உடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாயாய்.

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக் கதவம் தாழ்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ?ழ உன்மகள்தான்
ஊமையோ? அன்றி செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டுஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்த்தம் பொற்கொடியே!
புற்றுஅரவு அல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால்சோர
நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றிச்
சினத்தினால் தென்இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும்நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர்உறக்கம்!
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்.

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும்  பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்!நீ நன் நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்.

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுனீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்.

எல்லே! இளம்கிளியே இன்னம் உறங்குதியோ?
சில்என்று அழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாய்அறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தான்ஆயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்து எண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய
கோயில் காப்பானே! கொடி தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயில்எழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோர் எம்பாவாய்.

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குல விளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உளகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோர் எம்பாவாய்.

உந்துமத களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலி! கடைதிறவாய்
வந்துஎங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி!உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்றற் கில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலையே! துயிலெழாய்
செப்பம் உடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பென்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய்

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய்.

அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச் சிறிலே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்

மாரி முலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்று தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழாங்கிப் புறப்பட்டுப்
போதருமாப் போலேநீ பூவைப் பூவண்ணா! உன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங்கா சனத்திருந்த யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிவ்வுலகமளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி
பொன்றச்சகடமுடைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலாவெறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாவெடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கில னாகித் தான் தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்த கஞ்சன் வயிற்றில்
நெருப்பென நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும்யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையாய்! அருளேலோர் எம்பாவாய்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடுபுகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள் வளையே தோடேசெவிப் பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்குலத்து உன்தன்னை
பிறவிப் பெருந்துணை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னை சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்து சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவை
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத் தோள்
செங்கண் திருமுகத்து செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர் – நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்.
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத்திற்கும் வித்தாகும் கோதை தமிழ்
ஐயைந்துமைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பது வம்பு

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்துமூன்றுரைத்தால் வாழியே
உயர் அரங்கற்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லிவள நாடி வாழியே
வண்புதுவை நகர் கோதை மலர்ப்பதங்கள் வாழியே

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருடப்பத்து

ஓம் பூரணனே பதினாறு திங்கள் சேரும்
பொருந்தியே யருக்கன் பதினெட்டுஞ் சேரும்
காரணனே கருமுகில் பொன்மணி சேருங்
கருணைபெரு மஷ்டாக்ஷரங் கலந்து வாழும்
வாரணனே லட்சுமியோ டெட்டுஞ் சேரும்
மதிமுகம் போல் நின்றிலங்கு மாயா நேயா
ஆரணனே ரகுராமா கருடன்மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

மந்திரமோ அஷ்டசித்துமெட்டுஞ் சேரும்
வாழ்கிரகமொன்பதுமே வந்துசேரும்
கந்தர்வர் கணநாத ராசி வர்க்கம்
கலைகியான நூல் வேதங்கலந்து வாழும்
நந்தி முதல் தேவர்களுங் கவனயோகம்
நமஸ்கரித் துன்பாதம் நாளும் போற்ற
அந்தரமாய் நிறைந்திருக்கும் கருடன்மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

மூலமுதலோரெழுத்து நீர்தானாகும்
மூன்றெழுத்து மைந்தெழுத்து மொழியலாமோ
சீலமுதல் ஓம் அங் உங் மங் ரீங்கென்றே
சிவனுடைய திருநாமம் நீதானாகும்
காலமுதல் ஓம் அங் உங் மங் ரீங் கென்றே
கருணைபெருமிவ்வெழுத்து நீர்தானாகும்
ஆலவிஷங் கையேந்துங் கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

நவ்வென்றும் கிலியென்றும் ஓம் சிவாயவென்றும்
நமநம சிவசிவ ராரா வென்றும்
சவ்வென்றும் ஓங்கார ரீங்காரமாகித்
தவமுடைய இவ்வெழுத்தும் நீதானாகும்.
ஒவ்வொன்றும் ஓம் நமோ நாராயணா வென்று
உன்பாத முச்சரிந்துபோற்ற
அவ்வென்று ரகுராமா கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிக்கின்ற சிவசொரூப முனக்கேயாகும்
ஓம் அவ்வும் உவ்வுங் கிலியுமென்றே
பதிக்கைசந்த ஐந்தெழுத்தை வெளியில் விட்டே
பச்சைமுகில் மேனியனே பனிந்தெனுன்னை
விதிக்கிசைந்த மெய்ப்பொருளே அரிகோவிந்த
விளக்கொளி போல் மெய்த்தவமே விரும்பித் தாதா
அதற்கிசைந்த நடம் புரியுங் கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் புரியாவே.

வேதமுத லாயிருந்த சிங்க ரூபம்
விளங்குகின்ற இரணியனை வதையே செய்தாய்
பூதமுதலாம் பிறவும் புண்ணிய நேயா
புகழ்ந்தவர்க்குத் துணை வருவாய் யசோதை புத்திரா
நாதமுதல் வித்துவாய் உயிர்கட்கெல்லாம்
நலம் பெறவே நிறைந்திருக்கும் வரதபிரம
யாதவன் போல் நிறைந்திருக்கும் கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

முக்கோண நாற்கோண மொழிந்தைங்கோண
முச்சுடரே யறுகோண மெண்கோண மாகும்
சட்கோண நாற்பத்து மூன்று கோணம்
தந்திரமும் சிதம்பரமும் சகலசித்தும்
இக்கோணம் இதுமுதலாய் வராகமட்டும்
இறைவனாய்த் தானிருந்து இரட்சித்தாலும்
அக்கோண மீதிருந்து கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

பச்சை முகில் மேனியனே உனக்கே இந்தப்
பார்தனிலே பத்தவதாரமுண்டு
மச்சமென்றும் கூர்மமென்றும் வராகமென்றும்
வாமனென்றும் ராமன் என்றும் பவுத்திரனென்றும்
துஷ்டரையடக்கவே மோகினி வேடங்கொண்டாய்
தோன்றினாயுன் சொரூபமெல்லாம் அறிவாருண்டோ
அச்சந்தீர்த்தெனையாளக் கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியனாய்த் தோன்றி வந்தாய் மாபலிக்கு
விண்ணவர்க்காய் நரசிங்கரூபமானாய்
சாதியிலே யாதவனாய்க் கிருஷ்ணனாகத்
தானுதித்து வந்திருந்தாய் தரணி வாழ்க
சோதனைகள் பார்த்திடுவோர் துதிப்போர் தம்மைத்
துஷ்டரையும் வதை செய்து லோகமாழ்வாய்
ஆதிமுதலோரெழுத்தே நீ கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

மாயவனே ரகுராமா, அருகே வாவா
வஞ்சனைகள் பறத்தோட நெஞ்சில் வாவா
காயம்பூ நிறமுடனே கனவில் வாவா
கருமுகல் மேனியனே என் கருத்தில் வாவா
நாயகனே யென்னாவி லிருக்க வாவா
நாள்தோறு முன்பாதந் துதிக்க வாவா
ஆயர்குலத் துதித்தவனே கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

முப்புரத்தை யெரித்தவனே இப்போ வாவா
முகில் நிறத்தவனே ஜெகநாதா முன்னே வாவா
எப்பொழுதுந் துதிப்பவர் பங்கில் வாவா
ஏழைபங்கிலிருப்பவனே இறங்கி வாவா
ஒப்பிலாமணி விளக்கே யொளிபோல் வாவா
ஓம் நமோ நாராயணா வுகந்து வாவா
அப்பனே ரகுராமா கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.

துளபமணி மார்பழகா சுகத்தைத் தாதா
சுருதியே மெய்ப் பொருளே வரத்தைத் தாதா
களப கஸ்தூரியனே கடாட்சந் தாதா
கம்சனைமுன் வென்றவனே கருணை தாதா
பரம் பொருளே சிவசோதி பாக்கியம் தாதா
பக்தி முத்தி சித்தி செய்யவுன் பாதந் தாதா
அளவலா மெய்ப்பொருளே கருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ண கவசம்

**நோக்கமும் பயனும்**

துன்பங்களில் இருந்து விடுதலை பெற, குடும்பத்துக்கு நிம்மதி கிடைக்க, நோய் நொடிகள் வருமுன்னே தடுக்க, நீண்ட ஆயுளை இறைவனிடம் வேண்ட, ஆன்மாவைச் சுற்றி ஒரு வேலி அமைத்துக்கொள்ள இந்த கவசத்தைத் தினமும் பாராயணம் செய்ய வேண்டும்.

கண்ணன் ஒரு காவல் தெய்வம் நம்பிக்கையோடு பின்பற்றுவோர்க்கு நல்ல துணைவன் அவன் ஆதார புருஷன் ஆதர்ஸ் நாயகன், இகலோகத்துக்கும் பரலோகத்துக்கும் அவனே பாலம் கடுமையான சோதனைகளுக்குப் பின்னர் மலையளவு புகழையும் பொருளையும் அவன் தருகிறான் யாருடைய ஆசைகளையும் அவன் தடுப்பதில்லை ஆனால் அவற்றை ஒழுங்குபடுத்துகிறான் அவன் முன்னே தினந்தோறும் படிக்க வெளிவரும் முதற் கவசம் இதுவெ.

கண்ணனை நினைப்போர் சொன்னது பலிக்கும் இந்தக் கவசம் படிப்போர் கவலைகள் பறக்கும்

அகரம் முதலே அழியாப் பொருளே ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே ஏழை மனதில் வாழும் அருளே !

ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ் உலகை ஆக்கும் நிலையே அடியேன் சரணம் சரணம் சரணம் !
அறமே அறமே அறமே அறமே திறமே திறமே திறமே திறமே

தவமே தவமே தவமே தவமே வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய் உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம் அருள்வாய் அருள்வாய் கவசம்! கவசம்!

பொய்யா மொழியே பொங்கும் நிலவே பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க பாஞ்சசன்யம் பக்தனைக் காக்க
மூடர்கள் தலையும் மோகனன் காக்க முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க தேடும் விழியைத் திருமால் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிப் பொருளை கிருஷ்ணன் காக்க கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க தூயோன் வருக ! துணையே தருக !
மாதர் கற்பும் மடவார் நோன்பும் மாயோன் காக்க மலைபோல் வருக !
தகிடத் தகிடத் தகிடத் தகவென தறிபடு துன்பம் தறிகெட ஓட

திகிடத் திகிடத் திகிடத் திகிடத் திசைவரு கவலை பசைஇலதாக !
துருவத் துருவத் துருவத் துருவிடத் தொலையாப் பொருளே அலையாய் வருக !
நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக கர்மசந் யாசக் களமே வருக !
ஞானம் யோகம் நல்குவன் வருக ! நல்லோர் வாழ்வில் நலமே நிறைக !

அடியேன் துயரம் அதிகம் அதிகம் அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம் !
பொங்கும் வேலும் புண்ணாக் காது பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன் தாளில் விழுந்தேன் சரணம் சரணம் !
மதுசூதனனே மனிதன் சரணம் ! இருடீ கேச இயலான் சரணம் !

கீதா சாரிய கிருஷ்ணா சரணம் ! வேதா சாரிய வேந்தே சரணம் !
தேவகி மைந்தா சிறியேன் சரணம் ! யசோத குமரா அடியேன் சரணம் !
உன்னை விட்டொரு உறவுகளில்லை என்னை விட்டொரு இனியவனில்லை
நம்மை விட்டொரு நண்பர்களில்லை நன்மையில் உன்போல் நாயகனில்லை

எங்கெங்கே நான் இருந்திடும் போதும் ,அங்கங்கே நீ அருள் செய வருக !
கோசலை ஈன்ற குமரா வருக ! கோதையின் மாலை கொண்டவன் வருக !
ரகுவம் சத்தின் நாயகன் வருக !யதுவம் சத்தின் யாதவன் வருக !
மதுவை வென்ற மாதவன் வருக !மலைக்குடி கொண்ட மாலவன் வருக !

திருப்பதி யாளும் திருமால் வருக !திருவரங் கத்துப் பெருமாள் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய்துன்பம் இராவணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக !காலனை வெல்லக் கைவலி தருக !
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்காதில் குண்டலம் கையில் வில்லொடு

தண்டைக் காலில் சலங்கை குலுங்க அண்டையில் வந்து அருளே புரிக !
கௌரவர் தம்மை களத்தில் வென்றாய் கௌரவம் காக்க கண்ணா வருக !
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய் படித்தவன் மகிழப் பரமே வருக !
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன் பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்தக்கவனே நீ தயவுடன் அருள்க !
கல்லாய்ப் போனவள் காலடி பட்டுபெண்ணாய் ஆனது பிழையே யன்று !

உன்னால் தானே உலகம் இயக்கம் ! கண்ணனி லாமல் கடல்வான் ஏது ?
கண்ணனி லாமல் கடவுளுமில்லை கண்ணனி லாமல் கவிதையுமில்லை
கண்ணனி லாமல் காலமுமில்லை கண்ணனி லாவிடில் காற்றே இல்லை !
எத்தனை பிறவி எத்தனை பிறவி அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்

சத்திய நாதன் தாள்களை மறவேன் தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால் பிறவிகளில்லை நீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு ! உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு !
இங்கே நாங்கள் இருக்கும் வரையில் சங்கு முழங்கு தர்மம் நிலைக்க !

பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல் மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல் இன்னும் என்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியுமில்லாமல் தோற்றும் நோய்கள் பற்றி விடாமல்
முதுமைத் துயரம் மூண்டு விடாமல் படுக்கையில் விழுந்து பரிதவிக் காமல்

சிந்தனை கெட்டுத் திறமையும் கெட்டு நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினா றிளமை வழங்கு ! இப்பணி தொடர அற்புதம் காட்டு !
தளரா மேனியில் சக்தியைக் கூட்டு தாய்போ லிருந்து சாதம் ஊட்டு !
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு !

உலகில் ஒருவன் உத்தமன் இவனெனஉயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு !
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர் சரிசரி சரியெனத் தலையை யசைக்க
பொலி பொலி பொலியெனப் புகழும்விளங்க மளமள மளவென மனையிருள் நீங்க
கலகல கலவென காசுகள் சேர தளதள தளவென தர்மம் தழைக்க

வரவர வரவர வாய்ப்புகள் வாய்க்க ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம் ! அடியேன் வாழ்வில் நீயே கவசம் !
கவசம் கவசம் கவசம் கவசம் ! வந்தது வாழ்வில் மன்னவன் கவசம் !
கவசம் கவசம் கவசம் கவசம் ! வாழ்க்கை என்றும் கோபுரக் கலசம் !

அறிஓம் அறிஓம் அறிஓம் அறிஓம்
அவனே துணையென அறிவோம் ! அறிவோம்!
அறிஓம் அறிஓம் அறிஓம் அறிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்

ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுண்ட ஏகாதசி விரத மகிமை

ஏகாதசி என்பது சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இந்துக் கால கணிப்பு முறையில், 15 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் வரும் ஒரு நாளைக் குறிக்கும். இந்த நாட்கள் பொதுவாகத் "திதி" என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன. அமாவாசை நாளையும், பூரணை நாளையும் அடுத்து வரும் பதினோராவது திதி ஏகாதசி ஆகும். ஏகாதச எனும் வடமொழிச் சொல் பதினொன்று எனப் பொருள்படும். 15 நாட்களைக் கொண்ட தொகுதியில் பதினோராவது நாளாக வருவதால் இந்த நாள் இப்பெயரால் அழைக்கப்பட்டது. 30 நாட்களைக் கொண்ட சந்திர மாதமொன்றில் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் பூரணை ஈறாக உள்ள சுக்கில பட்சம் எனப்படும் வளர்பிறைக் காலத்தின் பதினோராம் நாளும், பவுர்ணமியை அடுத்து வரும் நாளிலிருந்து அமாவாசை முடிய உள்ள கிருட்ண பட்சம் எனப்படும் தேய்பிறைக் காலத்தின் பதினோராம் நாளுமாக இரண்டு முறை ஏகாதசி திதி வரும். அமாவாசையை அடுத்துவரும் ஏகாதசியை சுக்கில பட்ச ஏகாதசி என்றும், பவுர்ணமியை அடுத்த ஏகாதசியை கிருஷ்ண பட்ச ஏகாதசி என்றும் அழைக்கின்றனர்.

**ஏகாதசி தோன்றிய புராண வரலாறு**

தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மானிடர்களுக்கும் மிகுந்த தொல்லை அளித்து வந்தான் முரன் என்னும் அசுரன். இதனால் அவனை அழித்து தங்களை காக்குமாறு ஈசனை துதித்தனர். அவர்களை மகாவிஷ்ணுவை சரணடைய கூறினார் சிவபெருமான். அதன்படி அனைவரும் விஷ்ணுவை சரணடைந்தனர். அவர்களை காக்க எண்ணிய மகாவிஷ்ணு, அந்த அசுரனோடு போர் புரியத் தொடங்கினார். போர் 1000 ஆண்டுகள் கடுமையாக நீடித்தது. அதன் பிறகு மிகவும் களைப்படைந்தவராய் மகாவிஷ்ணு பத்ரிகாஸ்ரமத்தில் உள்ள ஒரு குகையில் படுத்து ஓய்வெடுத்தார். அந்த நேரத்தை தனக்கு சாதகமாக்கி கொண்டு, "முரன்" பகவானை கொல்லத் துணிந்த போது, அவருடைய திவ்ய சரீரத்தில் இருந்து அவருடைய சக்தி ஒரு பெண் வடிவில் வெளிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளை அசுரன் நெருங்கிய வேளையில் அவளிடம் இருந்து வெளிப்பட்ட ஓங்காரமே, அசுரனை எரித்து சாம்பலாக்கியது. விழித்தெழுந்து நடந்ததைக் கண்ட நாராயணன், அந்த சக்திக்கு "ஏகாதசி" எனப் பெயரிட்டு உன்னை விரதம் இருந்து போற்றுவோருக்கு நான் சகல நன்மைகளையும் தருவேன் என வரமளித்து தன்னுள் மீண்டும் சக்தியை ஏற்றுக்கொண்டார். எனவே ஏகாதசி எனும் சக்தி விழிப்புடன் இருந்து நாராயணனின் அருளும் வரமும் பெற்ற ஏகாதசி நாளில் நாமும் கண்விழித்து விரதம் கடைபிடித்தால் அவரின் அருள் பரிபூரணமாக கிடைக்கப்பெற்று நீங்காப் புகழுடன் வாழ்வோம் என்பது ஐதீகம்.

**வைகுண்ட ஏகாதசி**

மார்கழி மாத சுக்கில பட்ச (வளர்பிறை) ஏகாதசி வைகுண்ட ஏகாதசி எனப்படுகின்றது. இந்து சமயத்தவர்கள், சிறப்பாக வைணவர்கள் வைகுண்ட ஏகாதசியில் விரதம் இருந்து திருமாலை வழிபடுகின்றனர். மார்கழி மாதம் ஏகாதசி விரதம் இருந்து வழிபடுவோருக்கு யாம் வைகுண்ட பதவி அளித்து ஆட்கொள்வோம்" என்பது திருமால் வாக்கு என அவர்கள் நம்புகின்றனர். கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, மனம் என்னும் பதினோரு இந்திரியங்களால் செய்யப்படும் தீவினைகள் எல்லாம் இந்த பதினோராவது திதியில் விரதம் இருந்தால் அழிந்து விடும் என்பது நம்பிக்கை. ஏகாதசியன்று பகல் உறக்கம், இருவேளை சாப்பிடுதல், உடலுறவு என்பவற்றைத் தவிர்த்து விரதம் மேற்கொள்கின்றனர். ஏகாதசியன்று இந்து சமயத்தவர் திருமண நிகழ்வுகளையும் தவிர்க்கின்றனர். ராவணனின் இன்னல்களை சகிக்க முடியாத தேவர்கள் பிரம்மாவுடன் வைகுண்டம் சென்று மார்கழி மாத சுக்லபக்ஷ (வளர்பிறை) ஏகாதசியன்று நாராயணனை வணங்கி தாங்கள் துன்பங்களை கூறினாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானும் பிரம்ம தேவர்களுக்கு தரிசனமளித்து அவர்களைக் காத்தருளினாராம். இவ்வாறு தேவர்களின் துன்பத்தை போக்கியதால் வைகுண்ட ஏகாதசிக்கு முக்கோடி ஏகாதசி என்ற பெயரும் உண்டு. தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற வேண்டி இரவும், பகலும் விரதம் இருந்து பாற்கடலை கடைந்த போது அமுதம் வெளிப்பட்டது என்றும் துவாதசியன்று மகாலட்சுமி சமுத்திரத்தில் இருந்து வெளியே வந்து தேவர்களுக்கு திருக்காட்சி அளித்து அவர்களுக்கு அருளாட்சி புரிந்தார் என்றும், அன்று முதல் ஏகாதசி அன்று இரவும், பகலும் விரதம் இருந்து மஹாவிஷ்ணுவை துதிப்போருக்கு இந்தப் பிறவியில் நிலைத்த புகழ், நோயற்ற வாழ்வு, நன்மக்கட்பேறு முதலியவற்றை பகவான் அளிப்பதோடு, மறுபிறவியில் வைகுண்டவாசம் சொர்க்கவாசல் வழங்குவதாகவும் புராணங்களில் கூறப்படுகிறது. ஒரு வருடத்தில் வரும் 24 ஏகாதசிகளும் அதில் விரதம் இருப்பதால் கிட்டும் பலன்களும்

1. உற்பத்தி (ஏகாதசி) - மார்கழி - க்ருஷ்ண (பக்ஷம்) - சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

2. மோட்ச - மார்கழி - சுக்ல - வைகுண்டம் கிடைக்கும்.

3. ஸபலா - தை - க்ருஷ்ண - பாப நிவர்த்தி (உலும்பகன் மோட்சம்).

4. புத்ரதா - தை - சுக்ல - புத்ர பாக்கியம் கிடைக்கும் (சுகேதுமான் விரதம் இருந்து பிள்ளைகள் பெற்றான்).

5. ஷட்திலா - மாசி - க்ருஷ்ண - அன்ன தானத்திற்கு ஏற்றது.

6. ஜயா - மாசி - சுக்ல - பேய்க்கும் மோட்சம் உண்டு (மால்யவான் பேயான சாபத்தில் இருந்து விடுதலை பெற்றான்).

7. விஜயா - பங்குனி - க்ருஷ்ண - ராமர் சீதையை மீட்க, பகதாப்யர் எனும் முனிவரின் உபதேசப்படி, விரடம் இருந்த நாள்.

8. ஆமலதீ - பங்குனி - சுக்ல - கோதானம் செய்ய ஏற்றது.

9. பாப மோசனிகா - சித்திரை - க்ருஷ்ண - பாபங்கள் அகலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. காமதா - சித்திரை - சுக்ல - நினைத் காரியம் நடக்கும்.

11. வருதிந் - வைகாசி - க்ருஷ்ண - ப்ரம்மஹத்தி தோஷம் நீங்கும் (சிவன், பாரம்மன் தலையை அறுத்த தோஷம் நீங்கிய நாள்).

12. மோஹினி - வைகாசி - சுக்ல - பாவம் நீங்கும்.

13. அபார - ஆனி - க்ருஷ்ண - குரு நிந்தனை, பொய் சாட்சி போன்றவை அகலும்.

14. நிர்ஜலா (பீம) - ஆனி - சுக்ல - எல்லா ஏகாதசி பலனும் உண்டு (நீர் அருந்தக் கூடாது - பூமியில் நீர் குறைந்து இருக்கும் நாள்).

15. யோகினீ - ஆடி - க்ருஷ்ண - நோய் நீங்கும் (குபேரன் பணியாளன் ஹேமநாதன் விரதம் இருந்து குஷ்ட நோய் நீங்கிய நாள்).

16. சயிநீ - ஆடி - சுக்ல - தெய்வ சிந்தனை அதிகமாகும் - திரிவிக்கிரமனாய்த் தோன்றி, பின் பாற்கடலில் சயனித்த நாள் (பெயர்க் காரணம்).

17. சாமிகா - ஆவணி - க்ருஷ்ண - விருப்பங்கள் நிறைவேறும்.

18. புத்ரஜா - ஆவணி - சுக்ல - புத்ர பாக்கியம் கிடைக்கும்.

19. அஜா - புரட்டாசி - க்ருஷ்ண - இழந்ததைப் பெறலாம் - அரிச்சந்திரன் விரதம் இருந்த நாள்.

20. பத்மநாபா - புரட்டாசி - சுக்ல - பஞ்சம் நீங்கும்.

21. இந்திரா - ப்பசி - க்ருஷ்ண - பித்ருக்கள் நற்கதி பெறுவர்.

22. பாபாங்குசா-ப்பசி- சுக்ல-கங்கையில் நீராடிய பலன் கிடைக்கும். பாபங்கள் அகலும்.

23. ரமா - கார்த்திகை - க்ருஷ்ண - உயர்ந்த பதவி, வைகுண்ட பதவி கிடைக்கும்.

24. ப்ரபோதின் - கார்த்திகை - சுக்ல - பொதுவாக உயர்ந்த நன்மைகள் உண்டாகும்.

25. கமலா - (சில வருடங்களில் மட்டும்) -மகாலட்சுமி அருள் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகாதசி விரதம் இருக்கும் முறை

1. ஏகாதசி விரதத்தை மேற்கொள்ள இருப்பவர்கள் ஏகாதசிக்கு முதல் நாளான தசமியன்று பகலில் ஒரு வேளை மட்டுமே உணவு சாப்பிடவேண்டும்

2. ஏகாதசி அன்று அதிகாலையிலேயே கண்விழித்து குளித்து விட்டு, பூஜைசெய்து விரதத்தை மேற்க்கொள்ள வேண்டும்.

3. ஏகாதசி திதி முழுவதும் முடிந்தவரை பூரண உபவாசம் (பட்டினியாக) இருக்கவேண்டும். குளிர்ந்த நீரை குடிக்கலாம் . ஏழு முறை துளசி இலையை சாப்பிடலாம் . ஏகாதசி குளிர் மாதமான மார்கழியில் வருவதனால், உடலுக்கு வெப்பம்கிடைக்க துளசியை சாப்பிடவேண்டும். பட்டினி கிடப்பதினால் , ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வுகிடைக்கிறது. குளிர்ந்த நீர் வயிறை சுத்தமாக்குகிறது. அப்படி முழுவதும் பட்டினியாக இருக்க முடியாதவர்கள் நெய், காய்கனிகள், பழங்கள், நிலக்கடலை, பால், தயிர் போன்றவற்றை இறைவனுக்கு படைத்து (பிரசாதமாக) உண்ணலாம்.

4. இரவு முழுவதும் கண்விழித்து புராண நூல்களை படிப்பதும்,விஷ்ணு சகஸ்ரநாமம், விஷ்ணு பாடல்கள் மற்றும் ரங்கநாதர் ஸ்துதி முதலியவற்றை ஓதுவதுமாக பொழுதுபோக்க வேண்டும். கண் விழிக்கிறோம் என்றபெயரில் சினிமா,டிவி பார்க்க கூடாது.

5. ஏகாதசிக்கு அடுத்த நாள் துவாதசி வருகிறது . துவாதசி அன்று அதி காலையில் உணவு அருந்துவதை பாரணை என அழைக்கிறோம் . துவாதசியன்று அதி காலையில் உப்பு, புளிப்பு போன்ற சுவை இல்லாத உணவாக நெல்லிக்கனி, சுண்டைக்காய், அகத்தி கீரை இவைகளைசேர்த்து பல்லில் படாமல் கோவிந்தா! கோவிந்தா!, கோவிந்தா!!! என மூன்று முறை கூறி ஆல் இலையில் உணவுவிட்டு சாப்பிட்டு விரதத்தைமுடிக்க வேண்டும். (அகத்தி கீரை பொரியல், நெல்லிக்காய் துவையல், வறுத்த சுண்டைக்காய் ஆகியவை முக்கியமானவை.) துவாதசி அன்று காலையில் 21 வகையான கறி சமைத்து உண்ணவேண்டும். இதில் அகத்தி கீரை, நெல்லிக்காய், சுண்டை காய் அவசியம் இடம்பெறவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. துவாதசியன்று வைஷ்ணவ நாட்காட்டியில் காட்டியபடி குறிப்பிட்டநேரத்தில் ஏகாதசி விரதத்தை முடிக்கவேண்டும். விரதத்தை முடிப் தேன்பது நீரை கூட அருந்தாமல் விரதம் இருந்தவர்கள் துளசி தீர்த்தத்தையும், மற்றவர்கள் பகவானுக்கு தானிய உணவை படைத்து (பிரசாதமாக) உண்ணலாம். ஏகாதசிவிரதத்தை கடைபிடிப்பது போன்றே விரதத்தை முடிப்பதும் மிக மிக முக்கியமாகும் இல்லாவிடில் விரதம்இருந்த முழுபலனும் கிடைப்பதில்லை.

7.உணவு சாப்பிடும் முன் அதை பெரியோர்களுக்கு வழங்க வேண்டும். அன்று பகலில் தூங்காமல் இருக்க வேண்டும்.

ஏகாதசி விரதம் பத்தாவது திதியாகிய தசமி, பதினொன்றாவது திதியாகிய ஏகாதசி, பன்னிரண்டாம் திதியாகிய துவாதசி என மூன்று திதிகளிலும் மேற் கொள்ளும் விரதமாக அமைந்து உள்ளது. ஏகாதசி விரதம் இருப்பவர்கள் சகலவிதமான சவுபாக்கியங் களையும் அடைவர். இவ்விரதத்தால் உடல் நலமும் ஆரோக்கியத்துடன் திகழும்.

**ஏகாதசி அன்று செய்யக்கூடாதது**

ஏகாதசி திதி (குறிப்பாக வைகுண்ட ஏகாதசி) நாட்களில் தாய், தந்தைக்கு நினைவுநாள்( சிரார்த்தம்) வந்தால் அன்று நடத்தாமல் மறு நாள் துவாதசி அன்று நடத்தவேண்டும்.

ஏகாதசி அன்று உண்ணாமல் இருப்ப வர்களை கேலிசெய்து அவர்களை உண்ண வைப்பவன் நரகத்திலும் மிக கீழான நரகத்திற்குசெல்வான். ஏகாதசி அன்று துளசி இலைகளை பறிக்கக்கூடாது. தேவையானதை முதல்நாளே பறித்து வைத்துவிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளக்கு அகவல்



விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி மணி விளக்கே சீதேவி பொன் மணியே
அந்த விளக்கே சீதேவி பொன் மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாட்சி தாயாரே
பசும் பொன் விளக்கு வைத்து பஞ்சுத்திரி போட்டுக்
குளம்போல எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடி விளங்க
வைத்தேன் திரு விளக்கு மாளிகையும் தான் விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாரும் அம்மா
பெட்டி நிறையப் பூசணங்களும் தாரும் அம்மா
பட்டி நிறையப் பால் சுவை தாரும் அம்மா
புகழுடம்பைத் தாரும் அம்மா பக்கத்தில் நில்லுமம்மா

என்று திருவிளக்கு அகவல் சொல்லி
மஹாலக்ஷ்மியை விளக்கில் வந்து அமரும் படி தியானிக்கவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேதார கௌரிக் காப்பு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்

உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே

அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்

அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியா திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா

அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா

செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
என்தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே

காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்

காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்

தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு

சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முற்கால உணர்வுமுண்டு
இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
பொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்

முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர

ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே

காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

ஓம் சக்தி ஓம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கந்தர் சஷ்டி கவசம்'

குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்.
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

நூல்

சஷ்ட்டியை நோக்க சரவணபவனார்
சிஷ்ட்டருக் குதவும்செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வாகனனார்

கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திர முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரஹணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டா யுதம் பாச அங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன்வருக
ஐயும் கிலியும் அடைவுடன்சௌவும்
உய்யொளி சௌவும் உயிர் ஐயும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயம்
நிலை பெற் றென்முன் நித்தம் ஒளிரும்

சண்முகம் நீயும் தணியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறம்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து தவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திரு வடியை உருதி யென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என் உயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கையிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனை வேல் காக்க

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனக வேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அறையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக்கலங்கிட
இரிசிக் காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டினும் எதிர்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோடனே வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக்கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினில் முட்ட பாசக்க யிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே
இடும்பனை ஏற்ற இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத் தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள்குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீது உன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓரரசே

மயில்நட மிடுவோய் மலர் அடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரஹ வழிபாடு ஸ்தோத்திரம்

**சூரியன்**

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்!

**சந்திரன்**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீரப்பாய் சதுரா போற்றி!

**செவ்வாய்**

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு!

**புதன்**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்த ருள்வாய் பண்ணொலி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி!

**குரு**

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றிக் கடாட்சித் தருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுக்கிரன்**

சுக்கிர மூர்த்தி சுபசுகம் ஈவாய்
வக்கிரமின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே!

**சனி**

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

**ராகு**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
இகரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி!

**கேது**

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீரப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம் என்பது?

### மரணம் என்றால் என்ன?

அது உயிர் உடலை பிரிவது. இது வாழ்க்கையின் தொடக்கம். மரணத்தினால் உயிரும் அதன் அறிவு வளர்ச்சியும் அழிந்து போவதில்லை. பிறந்த ஒவ்வொருவரும் இறக்கின்றார்கள். இறந்த பின் உயிர் வாழ்கின்றனர். மரணம் என்பது நாம் ஒரு வீட்டை விட்டு இன்னுமோர் வீட்டில் வாழ்வது போன்று. நாம் கிழிந்து போன உடையை எறித்து விட்டு புதிய உடையை அணிகின்றோம். அது உயிர் உடலை விட்டு புதிய உடலினுள் நுழைவது போலாகும். உயிர் மேலும் அனுபவங்களைப் பெற்று வளர்ச்சியடைவதற்கு மரணம் இன்றியமையாத நிகழ்வாகும் இறப்பையும் பிறப்பையும் தூங்குவதற்கும், விழிப்பதற்கும் ஒப்பிடலாம். தான் இருக்கும் உடல் வாழத் தகுதியற்றதாகும்போது உயிர் தன்னை விட்டுப் பிரிகின்றது. ஒரு உடலில் உயிர் புகுவது பிறப்பு எனவும் அதனை விடுவது இறப்பு எனவும் கூறப்படுகின்றது.

### மரணக் கிரியை தொடர்பான சில விளக்கங்கள்

1. இறுதிக் கடன்களை பெண்கள் ஏன் செய்வதில்லை?

இந்து தர்மம் மனுநீதியை அடிப்படையாகக் கொண்டது. அது கணவனுக்கு விருப்பமான பணிகளை செய்யத்தான் பெண்களுக்கு உரிமை வழங்குகின்றது. பெற்றோர்களின் பாவ, புண்ணியங்களை ஆண்பிள்ளைகளே ஏற்பதால் அவர்களே இறுதிக் கடன்களைச் செய்யத் தகுதியானவர்கள்.

2. உடலை எரியூட்டும் முன் தண்ணீர் நிறைந்த பானையில் மூன்று துளைகள் இட்டு பின்னர் அதை உடைப்பதன் தத்துவம் என்ன?

நாம் இறந்த பிறகு பூமியில் செய்த பாவத்திற்கான சிரமத்தை அனுபவிக்க நம் ஜீவன் நரகட், ரௌரவம், மகாரௌரம் என்னும் மூன்று லோகங்களுக்கு அனுப்பப்படும் என்று கூறப்படுகிறது. இங்கு தண்ணீர் கிடையாது அதனால் பானையில் தண்ணீர் நிரப்பி மூன்று முறை சுற்றி வந்து உடைக்கப்படுகின்றது. அந்த தண்ணீர் எந்த லோகத்தில் இருந்தாலும் இறந்தவர்களைச் சென்றடையும் என்பதே நம் பெரியோர்களின் நம்பிக்கை. ஒரு குழந்தை பிறக்கும் போது தாயின் பனிக்குடத்தில் மூன்று துளைகள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. நாம் பிறந்த வழியிலே உலகை விட்டுச் செல்வதற்காக இந்தச் சடங்கு என்ற விளக்கமும் தரப்படுகிறது.

3. ஒருவன் இறந்த பிறகு அவரின் உடலுக்கு அருகில் தேவாரம் போன்ற பக்திப் பாடல்களைப் பாடுவதற்கான காரணம் என்ன?

உயிர் பிரியும் ஒருவரின் உணர்வுகள் உடனடியாப் பிரிவதில்லை என்று கூறப்படுகின்றது. அதனால்தான் நாம் உச்சரிக்கும் மந்திரங்களை மாண்டவரின் ஜீவனால் கேட்க முடியும் என்ற வேதத்தின் கர்ம காண்டமும், இறந்தவருக்கருகில் கடவுளின் நாமத்தை உச்சரிப்பதில் பாவம் குறைந்து அடுத்த ஜென்மத்தில் அவர் உயர்ந்த ஜீவனாக பிறக்க வழியேற்படும் என்று கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அஸ்த்தியை கடலில் கலப்பது ஏன்?

புண்ணிய நதிகள் றாவும் கடலில் கலக்கின்றன. அஸ்தியை கடலில் கலப்பதால் அனைத்து புண்ணிய நதிகளும் கலப்பதாக பொருள். இந்த ஜீவன் மறுபடியும் உலகின் எந்தப் பகுதியிலும் பிறக்கலாம் என்பதால் சரீரத்திற்கு மூலாதாரமான அஸ்தி கடலில் விடப்படுகிறது.

5. இந்துக்களை எரிப்பது சரியா? அல்லது புதைப்பது சரியா?


சன்நியாசிகளை மட்டுமே மண்ணில் புதைக்கலாம் என்று இந்து தர்மம் கூறுகின்றது. அவர்களின் உயிர் மண்டைக் குழியிலிருந்து விடுபட்டதாக இருத்தல் வேண்டும். சாதாரணமானவர்களுக்கு உயிர், கண், மூக்கு, வாய், காது, குறி ஆகியவற்றின் வழிபோகும் உஷ்ணத்தில் உருவாகும் இவ் உடல் உஷ்ணத்திலேயே (நெருப்பிலே) வேக வேண்டும் என்று கூறப்படுகிறது. 11 வயதுக்கு குறைவான ஆண் பிள்ளையாயினும் 7 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைகளாயினும் அவர்களைப் புதைக்க வேண்டும்.

6. வீட்டில் மரணம் ஏற்பட்டு எத்தனை நாட்களுக்கு பின் கோயிலுக்குச் செல்லலாம்?

தந்தை அல்லது தாயாரை இழந்த பெரிய மகள் (கடமையைச் செய்தவர்) ஒரு வருடத்திற்கு ஊர் எல்லையை தாண்டக் கூடாது என்று மனுநீதி கூறுகின்றது. ஆனால் இது இப்போதைக்கு சாத்தியமில்லை. ஆனால் முப்பது நாட்கள் கழிந்த பின்னே கோயிலுக்கு செல்லவேண்டும்.

7. இறந்தவர்களுக்கு வாய்க்கரிசி போடுவதன் காரணம் என்ன?

இந்துக்களின் சடங்குகளில் அரிசி மிகுந்த முக்கியத்துவம் உடையது. மனிதன் தனது வாழ்க்கையில் நடாத்தும் போராட்டம் அனைத்தும் அடிப்படையில் உணவுக்கே. இறந்தவர்களுக்கு நாம் போடும் அரிசி அவருக்கு வாய்க்கும் இறுதி அரிசி அகும். மணமக்களை ஆசீர்வதிக்கும் போதும் அரிசி போடுகின்றோம். இது மஞ்சள் அரிசி மங்களத்தைக் குறிக்கும். ஆனால் வாய்க்கரிசி போடும்போது மஞ்சள் சேர்க்கக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணச் சடங்கு தொடர்பான விடயங்கள்

**மரணச் சடங்கு:**

மரணச்சடங்கினை சாவீட்டுக் கிரியை , மரணக்கிரியை, செத்த வீட்டுக் கிரியை, பிரேதக்கிரியை, சவக்கிரியை, உத்தரக்கிரியை, அபரக்கிரியை, போன்ற பெயர்களால் குறிப்பிடுகின்றனர்.

**அபரக்கிரியை:**

அபரம் என்றால் பிந்தியது, உடலைவிட்டு போனபின் செய்யப்படுவது என்பது பொருள்.

**மரணக்கிரியை செய்யத்தக்கவர்கள்:**

சைவக் குருக்கள் அவர் நல்லறிவு, ஒழுக்கம், கிரியை, விளக்கம், அக்கினிகாரியம் உடையவராய் இருத்தல் வேண்டும்

**சாவது உடலா? உயிரா?**

சாவது உடல்தான் உயிர் அனாதியாக உள்ள பொருள் அது அழிவது இல்லை. பல பிறவிகளை எடுத்தெடுத்துச் செய்த வினைகள் எல்லாம் தீர்ந்த பின் சிவகதி சேர்ந்து இன்புற்றிருக்கும்.

**உயிர் வாழ்வின் மூன்று நிலைகள்:**

இம்மை : இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் நிலை.

மறுமை: இவ்வுடல் இறந்த பின் வேறு உடல் எடுத்து வாழும் நிலை.

அம்மை: வினைத் தொடர்புகள் எல்லாம் நீங்கிய பின் சிவகதியில் இன்புறும் நிலை.

**உடல் உயிரை விட்டு பிரியும் உறுப்பு:**

இந்த உடலுக்கு கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குத்துவாரம் இரண்டு, வாய், மலவாசல், சலவாசல், ஆகிய ஒன்பது வாசல்கள் உள்ளன. இதில் ஏதாவது ஒரு வாயிலால் வெளியேறும் போது அவதானித்தால் அந்த வாயிலில் அசைவு தெரியும்.

**இறந்தவுடன் கை, கால், விரல்களை கட்டுதல்:**

உயிர் போய் சிறிது நேரத்தில் உடல் விறைத்துவிடும். விறைக்குமுன் உடலை நேராக வளர்த்திக் கை விரல்கள், வாய் என்பவற்றை நோக்கிக் கட்டிவிட்டால் உடல் ஒழுங்காக இருக்கும் என்பதற்காக சீலைத்துணியால் கட்டப்படும் கிரியையின் போது அவை அவிழ்க்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரேதம் வைக்ககப்படும் இடத்தின் மேல் வெள்ளை கட்டுதல்:**

இதுவரை உடலை ஆதாரமாக கொண்டிருந்த உயிர் உடலை விட்டு வெளியேறியதும் ஆதாரமின்றி அந்தரப்படும். உயிர் தாங்குவதற்காகவே புதிய தூய்மையான வெள்ளை கட்டப்படுகின்றது.

**தலைமாட்டில் நெய் விளக்கு ஏற்றுதல்:**

உடலை விட்டு வெளியேறிய உயிர் இருட்டில் அலையாமலும், அது செல்லும் வழிக்குத் தெய்வீக ஒளி உன்டாகவும், சிவசிந்தனையை அந்த இடத்தில் உண்டாக்குவதற்கும் தலைமாட்டில் நெய் விளக்கு ஏற்றப்படுகிறது.

**இறந்த இடத்தில் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைத்தல்:**

உயிர் உடலைப் பிரிந்து முப்பத்தொரு நாளும் அங்கு இருக்கும். அதன் பசி, தாகத்தைத் தீர்ப்பதற்காக இறந்த இடத்தில் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைக்கப்படுகின்றது.

**வாய்க்கரிசி போடுதல்:**

இறந்தவர் பசி, தாகத்துடன் செல்லக்கூடாது என்பதற்காகவும், இதுவரை காலமும் உணவு தந்தவரிற்கு வாய் நிறைய அரிசி போடப்படுகின்றது. வீட்டில் பெண்களும் , மயானத்தில் ஆண்களும் வாய்க்கரிசி போடுவர். இது மன ஆறுதலுக்காகச் செய்யப்படுகிறது.

**இறந்தவரின் உடலை வைத்தல்:**

இறந்தவரின் உயிர் செல்லும் திசை தெற்கு (தென் புலம்) ஆகும். ஆதலால் தலை தெற்குப்பக்கமாக இருக்கும் படி வைத்தல் வேண்டும்.

**சுடலையில் பிரதேத்தைச் சுற்றுதல்:**

பிரதேசத்தை சுடலையில் சுற்றும் போது மூன்று முறை இடப்பக்கமாகச் சுற்றிவந்து தலைப்பக்கம் தெற்கே இருக்கக்கூடியதாக வைக்க வேண்டும். அபயக்கிரியையில் எல்லாம் இடமாகவே நடைபெற வேண்டும்.

**கருமங்கள் நடைபெறும் தடவைகள்:**

இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள உண்மைப் பொருட்கள் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுமாகும். ஆதலால் செய்யும் கருமங்கள் சரியாக நிறைவேறுவதற்கு மூன்று முறை செய்யப்படும். மூன்று முறையில்தான் யாவும் பூரணமாவது நியதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிசி, தேங்காய்த் துண்டுகள், மஞ்சள், நெற்பொறி எரிந்து செல்லல்:**

பிரேதம் போகும் வழியில் எதிர்ப்படும் பேய் பிசாசு மற்றும் துர்தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காக அரிசி, தேங்காய்த் துண்டுகள், மஞ்சள்,நெற்பொரி எறிந்து செல்லப்படுகின்றது.

**மூன்று பிடி மண் போடல்:**

உரிமைக்காரர் பிரதேசத்தின் தலை, நெஞ்சு, கால், ஆகிய மூன்று இடங்களில் போட வேண்டும் இதுவே மூன்று பிடி மண் போடல் எனப்பகிறது.

**பிரேதம் எரிந்த சாம்பலை புண்ணிய தீர்த்தத்தில் இடல்:**

நாம் உயிருடன் இருக்கும் போது புண்ணிய தீர்த்தத்தினால் நீராடினால் எங்கள் உடல் குற்றமும், உயிர்க்குற்றமும், நீங்குவது போல இறந்த பின் சாம்பலை அங்கு கரைப்பதால் இறுதியாக அவரிடமிருந்த குற்றங்கள் நீங்கும் என்பதற்காக பிரேதம் எரிந்த சாம்பல் புண்ணிய தீர்த்தத்தில் இடப்படுகிறது.

**31ம் நாள் அந்தியேட்டி:**

உடலை விட்டு பிரிந்த உயிர் 31 நாட்கள் அந்த இடத்திலேயே நிற்கும் என்பது சாத்திர உண்மை. 31ம் நாள் கிரியையுடன் அது செல்ல வேண்டிய கதிக்குச் செல்லும். ஆதலால் இறுதியில் செய்யப்படுவதாகிய கருமம் இதுவாகும்.

**பிதிர் கடன் செய்தல் :**

பிதிர் கடன் சிரத்தையோடு செய்யப்படுவதால் சிரார்த்தம் எனப்படும். இறந்தவரின் ஆன்மா எந்த நிலையில் எங்கிருந்தாலும் அவர் பெயரில் செய்யப்படும் சிரார்த்தங்கள் தான தர்மங்களில் பயனை பிதிரர்கள் அவருக்கே சேர்ப்பார். அதனால் அவர் சாந்தியும், ஆன்மா ஈடேற்றமும் அடைவர். செய்தவருக்கு ஆசியும் வழங்குவார். ஆடி, புரட்டாதி, மார்கழி, மாதங்களில் பிதிரர்கள் பூமியை நோக்கி வந்து தான தர்மங்களை ஏற்கும் காலம் என ஞானியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆதலால் இக்காலங்கள் பிதிர்கடன் செய்ய உகந்தவையாகும். ஆடி அமாவாசையும் புரட்டாதி மஹாளய பட்ஷமும் இதற்கு விஷேட காலங்களாகும். பொதுவாக சிரார்த்தம் செய்யும் காலங்களிலும் செய்வது சிறந்தது. தந்தையாம் தன்மையுடைய சூரியனின் கிரகணங்கள் (கதிர்கள்) அமாவாசைக் காலத்திலும், தந்தையாம் தன்மையுடைய சந்திரனின் கிரகணங்கள் (கதிர்கள்) பூரணையிலும் பூமியில் தாக்கத்தை உண்டாக்குவதால் பிதிரர்கள் பூமியை நோக்கி வரும் காலமாகும். ஆதலால் தந்தைக்கு அமாவாசையும், தாய்க்கு பூரணையும் உகந்தவையாகும்.

மூலம் : ஆத்மா விமோசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றற்பா

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின்
எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே?

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடு ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதேன்ன !

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடிவந்து சேரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க !
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க !
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !

- கவிப்பேரரசு வைரமுத்து -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**மண்ணக வரவு**
**22**
**03**
**1940**



**விண்ணக விரைவு**
**09**
**02**
**2018**

அமரர்

# குமாரியன் தர்மலிங்கம்

**வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்**
**கொண்ட குமாரியன் தர்மலிங்கம் அவர்கள்**
**09.02.2018 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரியன், தங்கம் ஆகியோரின் அன்பு மகனும்.
தவமணி அவர்களின் பாசமிகு கணவரும்.
காலஞ்சென்றவர்களான கந்தக்குட்டி, புதுநாயகம் ஆகியோரின் பாசமிகு மருமகனும்.
பவானி (ஆசிரியை), பாலமுரளி, சுமதி (ஆசிரியை), சிவமலர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்),
பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்.
ஹரிகரன் (அவுஸ்ரேலியா),இமாலிநிறோஜினி, மங்களேஸ்வரன், சிவகுமாரன், விஜிதா
ஆகியோரின் மாமனாரும்.
காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, சிவசம்பு, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும்.
பத்மநாதன், குணரெத்தினம், ராஜேஸ்வரி, சீதேவிப்பிள்ளை மற்றும்
காலஞ்சென்ற ராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும்.
கிரிவோஷன், சாய்லஹரீஸ், கிர்த்தன்யா ஆகியோரின் அம்மப்பாவும்
டகாம்தி, அக்ஷயன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று
11.02.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப.10 மணியளவில்
வந்தாறுமூலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
தேவாலய வீதி, வந்தாறுமூலை

ஸ்பீட் பிரிண்டல், கிரான் - 065 2054 090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். குமாரியர் தருமலிங்கம்
## அவர்களின் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளம் இருந்து உங்களுக்காய்**
**மனம் நெகிழ்ந்து நவில்கின்றோம்**

மரணச் சடங்குதனில்
மனமுருகி நெகிழ்ந்து
அழுது புலம்பி
ஒப்பாரி இட்டோர்க்கும்
மனம் அழுது நொந்து
மலர்வளையம் வைத்தோர்க்கும்
மலர்மாலை சாற்றி
மனம் கலங்கி நின்றோர்க்கும்
பதாதைகள் மூலமாக
அஞ்சலி செய்தோர்க்கும்
கொழும்பில் இருந்து வந்து
துயரம் பகிந்தோர்க்கும்
இறுதி யாத்திரையில் இணைந்து
மயானம் வரை வந்தோர்க்கும்
உடனிருந்து உதவி செய்த
உறவுகள் அனைவருக்கும்
எட்டு நாள் இரவுகளை
விடியவைத்த நண்பர்கட்கும்
துயரமான நாட்களிலே
உணவளித்த அனைவருக்கும்
உள்ளம் நெகிழ்ந்து வந்து
மனம் கலங்கி நின்றோர்க்கும்
இன்றைய நாளில் கூட
இல்லம் வந்த உங்களுக்கும்
நல்ல பல பணிகள் செய்த
நலன் புரி உறுப்பினர்க்கும்
எம் உள்ளம் இருந்து நவில்கின்றோம்

- நன்றி -
இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org